www.tamilarangam.net


# சர்வதேச தமிழர்

15,-NKr. Vol.2;Nr.4;April 1995 **SARVADESA TAMILER** ISSN:0805-7443




துசித்தாவின் நடனம்!



பூச்செண்டுடன் நோர்வே கலைஞர்!



பேர்லவோக்



பி.சத்தியநாராயணனுக்கு பாராட்டு!

## உள்ளே:


மாடியால் வீழ்ந்த பாசையூர் யேசு சீலன்-க.சபாரத்தினம்,மாஸ்கோ.
கேரளக்கவிஞர் ஔபமண்ணாவின் பேட்டி-ச.வெள்ளிங்கரி,கேரளா.
19 நூற்றாண்டு தமிழ்க்கவிதையின் பரிமாணங்கள்-Dr.வ.மாசிலாமணி
வடதுருவநகரில் துசித்தாவின் அதிசய நடனம்!
தொடர்கதை:பனிப்பூக்கள்-காரையூரான் இ.தியாகலிங்கம்
நோர்வே பெண்கலைஞரின் சிறப்பு பேட்டி!
இலங்கைக்கடிதம்:விதுரன்;தமிழ்நாட்டுக்கடிதம்:பி.சத்தியநாராயணன்.
சிறுகதை:விழிப்புணர்வு-மீனா அண்ணா,புதுச்சேரி
சர்வதேச தமிழர்: ... தகவல்சேவை,பேனா நண்பர்சேவை!

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன் துரொண்கைம்:த.தியாகலிங்கம்
ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்;முபாரக் அலி கிறிஸ்ரியன்சாண்ட்:ம.பஸ்ரியன்ஏகசுண்ட்:பொன்.சிவா;துறம்சோ:கே.சிவராஜா;
வார்டோ:இ.தியாகலிங்கம்;போர்லவோக்:இரா.விஜய்;போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் கார்மோய்:பா.பாலேந்திரன்
பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன்;ந.பாலமுரளி81.4729336;திருமதி.த.மனோகரன்;மு.ஆறுமுகம் 81.5432126

## வாசகர் களம்/Readers' Forum

**அன்புடையீர்!**
வணக்கம்! சர்வதேச தமிழர்களிடையே இணைப்பையும்,ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்த "சர்வதேச தமிழர்"சஞ்சிகை மேற்கொண்டுவரும் முயற்சிகள் பாராட்டத்தக்கன!நல்ல பல செய்திகளை வெளியிட்டுள்ளீர்கள். காரையூரானின் பனிப்பூக்கள் நன்றாக இருக்கிறது. தங்கள் வெளியீட்டை லண்டனில் பலர் பார்த்துப் பாராட்டியுள்ளனர்.இங்குள்ள தமிழ்தகவல் நடுவம் இதனைப்பெற விரும்புகிறது. மாற்றாக அவர்கள் வெளியீடுகள் தங்களுக்கு அனுப்பப்படும். "சர்வதேச தமிழர்" சிறப்புடன்தொடர்ந்துவர வாழ்த்துக்கள்!
ஐ.தி.சம்பந்தன்-லண்டன் கிழக்கு.
(தமிழ் தகவல் நடுவத்துடன் "சர்வதேச தமிழர்"நட்புறவு,ஒத்துழைப்பு,மாற்றீடு. தகவல்பரிமாற்றம்(கல்வி,தொழில்,பொருளாதார மேம்பாடு) மேற்கொள்ளும்!ஆ-ர்)

---

**அன்புடையீர்!**
வணக்கம்!வாழ்க!! "சர்வதேச தமிழர்"பற்றிய செய்தி எங்களூர் பகுத்தறிவு இதழான "சிந்தனையாளன்"சஞ்சிகையில் வெளியாகியிருந்தது.மிகுந்த மகிழ்ச்சி!! தமிழ்,தமிழர்,மனிதநேயம் முதலியவற்றை அடிப்படையாக வைத்து தாங்கள் நடாத்தும் "சர்வதேச தமிழர்"இதழுக்கு எம் அகங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!பாராட்டுக்கள்! கடல்கடந்துவாழும் தமிழர்களின் வாழ்க்கைநலம்,பண்பாடு,சுகதுக்கங்கள் பற்றி அறிய இங்கு தமிழ்நாட்டில் மிகவும் ஆவலுடன் இருக்கிறோம்!"சர்வதேச தமிழரை" எம்நூலகத்துக்கு தவறாது அனுப்புங்கள்!நட்புக்கு நலம் சூழ்க!!
ப.வெங்கடேசன்-ஆசிரியர்,
வாலசாபேட்டை - தமிழ்நாடு

---

**அன்பின் ஆசிரியருக்கு!**
தமிழர் ஐக்கியம்,முன்னேற்றம் கருதும் "சர்வதேச தமிழர்"சஞ்சிகையை பிரித்துப் படிக்கும் போது என்ன ஒரு சந்தோசம்! தமிழருக்காக நடாத்தப்படும் இந்தச் சஞ்சிகை என்றும் தன் லட்சியம் குன்றாமல் முன்னேறவேண்டும்!தமிழரின் மனத்தில் தமிழ்,தமிழர் எனும் உணர்வை மேன்மேலும் மெருகேற்ற இச்சஞ்சிகை தனி ஒரு ஆயுதமாக திகழவேண்டும்! தமிழர் ஐக்கியம் பின்னால் நல்ல ஒரு எதிர்காலத்துக்கு அழைத்துச்செல்லும்! அதற்கு இச்சஞ்சிகை தன்முழுப்பங்கையும் செலுத்தும் என எதிர்பார்க்கிறேன்! இதன் நோக்கம்,முயற்சிகள் தமிழர் நெஞ்சில் பற்றிப்பரவ வேண்டும்!வாழ்க!!
எம்.ஏ.நிக்சன்- டாரின்,சவுதிஅராபியா.

---

**அன்புள்ள நண்பருக்கு!**
தமிழ்நாட்டைச்சேர்ந்த நான் இங்கு சவுதியில்"சர்வதேச தமிழர்" பற்றியறிந்தேன். அதுபற்றி மிகவும்ஆர்வமாயும் உள்ளேன். இதன்மூலம் புதிய தமிழ்நண்பர்களைச் சந்திக்கவும் ஆவலாக இருக்கிறேன். வாழ்க!வளமுடன் என்று பிரியமுடன் சஞ்சிகையை வாழ்த்தி மீண்டும் சந்திப்போம்! என விடைபெறுகிறேன்!!
எஸ்.காளிதாஸ்-சவுதிஅராபியா

---

**மதிப்புக்குரிய ஆசிரிய நண்ப!**
எங்கே "சர்வதேசதமிழரை"க் காணவில்லை,என எண்ணி ஏங்கி இருந்தபோது தான் எனது சிந்தனைக்கு உணர்வூட்டுவதுபோல் சிறந்த நலத்தோடும்,மலர்ந்த முகத்தோடும், மாண்புடன் சிறுவர் மலராக தவழ்ந்ததே என் கரங்களிலின்று! தூய தமிழ் அன்பு உள்ளத்தே நிறையப் பெற்ற நண்பர்களது சிந்தனையில் கருத்தொருமித்தல் உறவாடுவதுபோன்று, உயர்ந்த சிந்தனையும்,பொதுநலவேட்கையும் நிறைந்த எம்மிடையேயும் இவ்வாறான தெய்வீகத்திரு நிலைபெறுவதொன்றும் ஆச்சரியமானதல்ல! தங்கள் செயலாக்கம் மேன்மையுற வாழ்த்தியும்,சேவைநலம் வளர்ச்சிபெற பிரார்த்தித்தும் நிற்கிறேன்!வணக்கம்.
க.சபாரத்தினம் . மாஸ்கோ,ரஷ்யா

---

**அன்பின் ஆசிரியருக்கு!**
சர்வதேசமெங்கும் சுற்றி வலம் வரும், "சர்வதேச தமிழர்"தமிழ்த்தூது இதழ் கண்டு உள்ளமதில் உவகை கொண்டேன்."கேள்வி-பதில்" பகுதிக்கு "சர்வதேச தமிழர்" வாசலொன்று திறவாதோ?என ஆசையுடன்,ஆவலுடன் எதிர்பார்க்கிறான் வாசகனிவன்!வாழ்க "சர்வதேச தமிழர்"
மாத்தளை -தவ . சஜிதரன்
(தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் குறித்த " கேள்வி-பதில்"பகுதி விரைவில் ஆரம்பமாகும்.வாசகர்களிடமிருந்து கேள்விகள் எதிர்பார்க்கப்படுகின்றன.ஆ-ர்)

---

**மேன்மைதங்கிய ஆசிரியருக்கு!**
நெல்மணி என சிதறிக்கிடக்கும் தமிழ் இனஉணர்வுத்தமிழர்களை ஒன்றிணைக்கும் "சர்வதேச தமிழர்"எனும் குறிஞ்சி மலரே!முன்னேறு!முன்னேறு!தடைகளை உடைத்து வீறுநடையுடன் முன்னேறு! தமிழன் தமிழனுக்கு உதவிசெய்து,மற்ற இனத்தவர்க்கு நம் ஒற்றுமையை எடுத்துக்காட்ட வேண்டும்! "உலகத்தமிழர் திரைப்படநிறுவனம்"என தமிழர்பண்பாடு, கலாசாரம் பரப்பும் அமைப்பை ஏற்படுத்த ஆர்வமாக உள்ளோம்.இது குறித்து நடிப்பு,தயாரிப்பு, இயக்கம் ஆர்வமுள்ள உலகத்தமிழர்களை தொடர்புகொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றேன். வாழ்க தமிழ்!வெல்க தமிழர் திறமை!!
**ஜான்.ராஜ்தேவர்,29/U,M.K.Stores,**
**Main Kandy st, Beemanagar,**
**Trichy 620001,India**

---

**அன்பின் ஐயா,**
உளம் உவந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்! தங்கள் சஞ்சிகைப்பணி மிகப்பயனுள்ள பணி!அனைத்துலகத்தமிழர்க்கும் உயர்வு தரும் பணி!இப்பணி தொடர்ந்து வளர வாழ்த்துகிறேன். உலகதமிழ் இலக்கிய, பண்பாட்டு அமைப்புகள் தொடர்பால் தமிழ்,தமிழர்உயர்வுபெறஉதவ விருப்பம்!
தமிழவேள்.க.இ.க.கந்தசாமி-செயலர்
**கொழும்பு தமிழ்சங்கம்:7,57th Lane,**
**Colombo.6,Srilanka/tl.1.583759**

---

**அன்பிற்கினிய ஆசிரியருக்கு!**
"சர்வதேசதமிழரை"மாதந்தோறும் படித்து மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறோம். "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்த குடி"என பழைமை வாய்ந்த புதிய தமிழர்,இன்று உலகம் எங்கும் பரந்து தம் கலை,கலாசாரம் பரப்பும்பணியால் பெருமகிழ்ச்சியடைந்தேன்! தமிழர் எண்ணங்களைப் பகிர்ந்து அவர்களை இணைக்கும் பாலம்போல் திகழும் "சர்வதேச தமிழர்" முக்கியம் வாய்ந்தஒரு பணியை மேற்கொள்வது மிகவும்சிறப்பே! சகல விடயங்களும் அருமை!ஒன்றையொன்று குறை கூறாவண்ணம் மிளிர்கிறது! காரையூரான் "பனிப்பூக்கள்"அருமையிலும் அருமை!
"தமிழன் என்று சொல்லடா!தலைநிமிர்ந்து நில்லடா"என புரட்சிக்கவிஞர் பாட்டுக்கேற்ப இன்று தமிழர் தலைநிமிர்கிறார்கள்!முன்னேறுகிறார்கள்!சுயநலமின்றி ஐக்கியமும் பெறவேண்டும் ! என்பது அவா! தமிழர் பெருமையை வளர்த்து,சிறுமையை நீக்க,தங்கள் பணி மிக முக்கியம் என்பது எம் கருத்து.
இனி வரும் காலங்களில் "சர்வதேச தமிழர்" நல்ல அருமை,பெருமைகளைப் புகட்டும்,சிறுமைகளை நீக்கும் இதழாக மேலும் சிறப்படைக! என பிரார்த்திக்கிறேன்.
வாழ்க தமிழ்!வளர்க "சர்வதேசதமிழர்" என்றென்றும் அன்புடன்,
**கோபி.ரவி,மட்டக்களப்பு இணைப்பாளர்**

## சர்வதேச தமிழ் பேனாநண்பர் சேவை

## Intl.Tamil Penfriends Service

**1.செல்வி.ஏ.சுகுணா**
வயது:18;ஆர்வமான துறை:தொலைக்காட்சி பார்த்தல்;நூல்கள் வாசித்தல்
எனக்கு வெளிநாட்டில் வாழும் தமிழர்களுடன் பேனா நட்புத்தொடர்புகொள்ள விருப்பம்!அவர்கள் வாழ்வுபற்றி அறியவும் மிகவும் ஆசை!
**Miss.A.Suguna,**
**3,Gnanapragasam Nagar,**
**Manj akuppam,Cuddalore-607001**
**Tamilnadu,India**

---

**2.எஸ்.காளிதாஸ்**
தமிழ்,தமிழர் நட்பில் ஆர்வமுள்ளவன். தமிழ்நாட்டின் தஞ்சாவூரைச் சேர்ந்தவன். சவுதிஅராபியாவின் ஜெட்டா நகரில் பணிபுரிகிறேன்.ஆர்வம்:நூல்கள்,சஞ்சிகை வாசிப்பு.கருத்து பரிமாறல்.
S.Kalidoss,Al-majal/Bawadi villa,
Room.14, PB.15006,
Jeddah- 21444,K.S.A.

---

**3.வி.எம்.லிங்கன்**
வயது.47.ஆர்வம்:பத்திரிகை,சஞ்சிகைகள் நூல்கள் வாசிப்பு;தமிழ்,தமிழர் தொடர்பு பி.பி.சி.வானொலி செய்திகள் கேட்பது.
V.M.Lingan/Foreman,K.O.C.
Kuwait& Gulf Link,Mangaf Camp
PB.47090,Fahaheel 64021,Kuwait



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கனடா:பா.சிவலிங்கம்416.4497607;ரி.எஸ்.மூர்த்தி:416.4675723:இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/அண்ணா பல்கலைக்கழகம்/44.2351723-3161; பேராசிரியர்.ஜ.இராமச்சந்திரன்/ஜ.ஐ.ரி.2351365/3094 ;திருச்சி:பேராசிரியர்கே.செல்லப்பா - பாரதிதாசன் பல்கலைக்கழகம்:பேராசிரியர் இரா.இரகுபதி/பிசப் ஈபர் கல்லூரி மதுரை:இரா.இரவி புதுச்சேரி:ச.வேல்முருகன்

சர்வதேச தமிழர்
1995 சித்திரை;தொகுதி.2;இல.4

## ஆசிரியர் கருத்து/Editorial

### தமிழர்களும் நன்றிஉணர்வும்!

திருவள்ளுவர் 2000 ஆண்டுகட்கு முன்
நன்றிஉணர்வு பற்றி எழுதிய குறட்பாக்
கள் இன்றும் பல தமிழர்கட்கு அறிவூட்
டப் பயன்படுவது ஆச்சரியம் தருகிறது!
திருக்குறளின் ஆழமானகருத்துக்கள்,
மனிதரை மாற்றும் சக்தி பெற்றன எனி
னும் தமிழர்களை அதிகம் மாற்றவில்லை
யோ என எண்ணத்தோன்றுகிறது.

ஒருவரில் ஒருவர் தங்கிவாழ்வதும்,உதவி
செய்வதும் தமிழர் மரபு எனினும்,உதவி
யை இரந்து பெறுவதும்,பின் அந்த
நன்மையை/உதவியை மறப்பதும்,மறைப்
பதும் சில தமிழர் பண்பாடாகி வருவது,
கவலை தருவது.

நோர்வேஜிய மொழியில் "நன்றியீனம்
தான் உலகின் வெகுமதி"என்பதை
அழகாக(utakk er verdens lønn)
கூறுவர்.திருவள்ளுவரோ ஒருபடி மேலே
போய்,"நன்றி மறப்பது நன்றன்று"என
சிறப்பாக கூறினார்.

பிறரின் உதவியின்றி தாமே செய்வதும்;
அன்றேல்- உதவிபெறின் ,பிறர்செய்த
உதவியை மறவாதிருப்பதும் சிறப்பு.
அதற்காக நன்றி கூறலும், உதவியவர்
நலம்பெற மானசீகமாகப் பிரார்த்திப்பது
ம் தமிழர்வாழ்வில் முக்கியம் பெறவேண்
டும்.

தமிழ்நாட்டின் அறிஞர்கள்,தியாகிகள்,
விஞ்ஞானிகள்,இலக்கியகர்த்தாக்கள்,
ஆத்மிகவாதிகள்,பொதுநலவாதிகள்
கலைஞர்கள் பலர் தமிழகமக்களுக்கு
மட்டுமன்றி,உலகத்தமிழர்கள்;உலகமக்க
ள் என பரந்துபட்டு தம்சேவையை
நல்கினர்.அவர்களை தமிழர் உலகம்
மறந்துவிடக்கூடாது. அதேபோல்
இலங்கை,மலேசியா,சிங்கப்பூர்,அமெரிக்
க,ஐரோப்பிய தமிழர்களும் தம்சேவையை
பலதுறைகளிலும் நல்கி வருகின்றனர்.
தமிழ்க்கல்வி,அறிவு ஊட்டல்,தமிழர் சமூ
க,பொருளாதார,அரசியல்உரிமைகளைப்
பாதுகாத்தல்,கலைகளை வளர்த்தல்
போன்ற சேவைகளில் ஈடுபட்டு உழைப்
போர் பங்கு, தமிழர் வாழ்வு,உயர்வில்
முக்கியம் பெறுகிறது.

ஆபத்தான யுத்தகாலத்தில் தமிழர் வாழ்
வுக்கு புகலிடம் தந்த நாடுகள்,தலைவர்
கள்,அமைப்புகள்,மனிதர்கட்கு தமிழர்கள்
என்றென்றும் நன்றியுடையவராவர்.
பிறமொழி பேசும்,பிறஇனம்,மதம் சார்ந்
தோர் பலர் தமிழர்கட்கு உலகின் மூலை
முடுக்கில் எல்லாம் என்றென்றோ உதவி
னார்கள்;இப்போதும் உதவுகிறார்கள்;எதி
ர்காலத்திலும் உதவலாம்.

அதற்கு தமிழர் நன்றியுடையவராக இரு
ப்பதும்,நட்புறவு பேணுவதும் மிக அவசிய
மாகிறது.ஆனால் சில தமிழர்கள் நன்றி
மறந்து நடப்பதும்,உதவிசெய்தவருக்கே
உபத்திரவம் தருவதும்;தமிழர் பால் உள்ள
இரக்கம்,அன்பு,நட்பை அழித்துவிடும்.

## சிந்தனைத்தடாகம்/Think Tank

---

### யுத்தத்தின் மறுபக்கம்................!

சண்டை தொடங்கிவிட்டது.கண்ணன்
என்ற போராளியும் தடைஅகற்றும் பணி
யில் இருந்தான்."ரோப்பிற்றோவை"எதிரி
முகாமின் சுருள்கம்பிக்குள் புகுத்தினா
ன்.அதோடு சேர்ந்து அவனும் அதற்குள்
சிக்கினான்.ஒன்றுமே செய்யமுடியாது!
தடையை அகற்றிக்கொடுத்தால் தான்
போராளிகள் உள்ளே புகுந்து முகாமைக்
கைப்பற்றுவர்.யோசிக்க நேரமில்லை.
கண்ணன் பலம் கொண்ட மட்டும் இழு
த்துப்பார்த்தான்.ஆனால் விடுபடமுடிய
வில்லை. தான் வீரச்சாவு அடைந்தாலும்
தடையை அகற்றிக் கொடுக்கவேண்டு
ம் எனும் நோக்கோடு ...."கிட்ட வராததிங்
கடா!கிட்ட வராதிங்கடா!!"என்று கத்திக்
கொண்டு "ரோப்பிற்றோ"வின் சேப்ரி
பின்னை இழுத்தான் கண்ணன். நிலை
யெடுத்திருந்த போராளிகள் அனைத்
தையும் பார்த்துக்கொண்டிருந்தனர். 3
செக்கன்கள்!ஒரு ஒளிப்பிளம்பு!அதைத்
தொடர்ந்து "டமார்"என பெரிய சத்தத்து
டன் "ரோப்பிற்றோ"வெடித்தது.25 மீற்றரு
க்கு கம்பிகளைச்சுருட்டி எறிந்தது.
கண்ணன் சின்னச்சின்ன சதைத்துண்
டுகளாகச்சிதறினான்.10 மீற்றருக்கு அப்
பால் படுத்திருந்த போராளிகளின் மேல்
கண்ணனின் இரத்தமும்,சதைத்துண்டு
களும் பட்டு வழிந்தன.
முகாமைக்கைப்பற்றும் நோக்குடன்
விரையும் போராளிகளை தன்செந்நீரால்
குளிப்பாட்டி வழியனுப்பினான் கண்ணன்
அவன் செய்த அந்தத் தியாகத்தால்,நாங்
கள் சுட்டு முறிவு இராணுவமுகாமைக்
கைப்பற்றி ஆயுதங்களையும் எடுத்துவர
முடிந்தது.
பின் முகாமைக்கைவிட்டு வரும்போது,
கம்பிக்கருகில் கண்ணனின் சிதைந்த
உடலைப்பார்த்து எல்லோரும் திகைத்து
விட்டோம்.ஓ! அந்த வீரனின் தியாகத்தை
எண்ணி சில வரிகள் எழுதுகிறேன்.

**விடுதலைப்புலி கருணாகரனின் டைரி**
**(நன்றி: எரிமலை/மார்ச்95,பாரிஸ்)**

---

### பம்பாயில் வாழ தமிழர் அனுமதி பெற வேண்டும்?

மகாராஷ்டிராவின் சிவசேனை-பாரதீய
ஜனதா கூட்டு அரசு சார்பில் ,பால்தக்க
ரே கூறியிருக்கும் கருத்து வலுப்பெறுமே
யானால் ,பம்பாயில் தமிழர்வாழ,தொழில்
செய்ய குடியேற "பெர்மிட்"வாங்கப்படவே
ண்டும் என சொல்லப்படுமாயின் அதை
எதிர்த்துக்களத்தில் இறங்கும் முதல்ஆள்
நானாகத்தான் இருப்பேன்.தமிழ்நாட்டில்
தமிழரைத்தவிர வேறுயாருக்கும் இடமில்
லை என்று சொல்லவேண்டியநிலைக்கு
நம்மை தள்ளமாட்டார்கள் என்றே
நம்புகிறேன்!தந்திரமான யுக்திகளை தமி
ழர்கட்கு எதிராக பயன்படுத்த நினைத்
தால் நாம் ஏமாளிகளல்ல!
-புரட்சிக்கலைஞர் **விஜயகாந்த்/"தேவி"**

---

**எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப
தறிவு -திருக்குறள்/திருவள்ளுவர்**

### உலகம் தழுவிய தமிழர்கூற்று:-

*கற்றது கைம்மண்ணளவு கல்லாதது
உலகளவு.........................ஒளவையார்
*யாதும் ஊரே யாவரும் கேளிர்(மனிதர்)
-கணியன் பூங்குன்றனார்
*தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
சகத்தினை அழித்திடுவோம்
-சுப்பிரமணிய பாரதியார்
*ஒன்றே குலம் ஒருவனே தேவன்
-வள்ளலார்

**தொகுப்பு:என்.ஆர்.இலட்சுமணன்**

---

*அறிவுலகத்தில் பகை இருக்கிறது:
எதிர்ப்பும் இருக்கிறது.ஏமாற்று உலகத்
தில் உறவு இருக்கிறது;ஒற்றுமையும்
இருக்கிறது.அதனால் தான் உலகமும்
இப்படி இயங்குகிறது.
-டாக்டர் மு.வரதராசன்

*மனிதனும் அவனுடைய செயல்களும்
வெவ்வேறானவை.நற்செயலைப்பாராட்ட
வேண்டும்.தீயசெயலைக் கண்டிக்க
வேண்டும். செயலைச்செய்யும் மனிதர்
நல்லவராயினும்,தீயவராயினும்,செயலின்
தன்மைக்கு ஏற்றவாறு மரியாதைக்கும்,
பரிதாபத்துக்கும் உரியவராகிறார்.
-மகாத்மா காந்தி

**வல்வெட்டித்துறை பா.பாலேந்திரன்**

---

*தனிப்பட்ட ஒருவருக்குரியனவற்றை
எவரும் கண்டு கொள்ளாதவாறு தனதா
க்கிக்கொள்ள முயல்வானது,களவு எனில்
பலருக்கு சொந்தமான பொதுவுடமை
யில் சலுகை பெற்றுக்கொள்வதும் பகற்
கொள்ளை தான்.ஒன்று நேரடியானது.
மற்றையது மறைமுகமானது.ஆகவே
சலுகை பெறுவதை இரட்டைக்களவு
என்று துணிந்து கூறிவிடலாம்.

---

*ஆலோசனை தாமாகத்திணிக்கப்படு
வதற்கும்,ஆலோசனையை நாம் நாடிச்
செல்வதற்கும் மிகுந்தவேறுபாடு உண்டு.
ஒன்று மற்றொன்றின் மறுதலை!இரண்
டுக்கும் நோக்கம் ஒன்றல்ல.
ஒன்று அழிவை ஊக்குவிப்பது;மற்றது
ஆக்கத்தை பிரதிபலிப்பது.

---

*மென்பனிக்குளிரில் பொரிந்து மண்ணி
னில் தூவும்போது மெத்தெனப்படியும்
பூவாய்,பஞ்சுபோல் காய்ந்து இறுகியபின்
அது மிக வலுப்பெறுகிறது.எங்ஙனமாயி
னும் அடியில் ஈரம் பொசியவே செய்யும்.
நல்லோரது மனமும்,வெண்பனிக்குழம்பு
போல் மெதுமையாகவே இருக்கிறது.
பிரச்சனைகளாலும்,துன்பங்களாலும்
இறுகிக் கல்லாகியபோதிலும் அடித்தள
த்தில் அமைந்த அன்பு என்றும் ஈரமாக
வே தொடர்ந்திருக்கும்.

**ஆரையம்பதி க. சபாரத்தினம்,ரஷ்யா**

---

*முடிந்துபோனவற்றையும்,முன்னால்
நடந்துகொண்டிருப்பதையுமே,யோசித்து
க் கொண்டிருப்பவர்கள், வருகின்ற கால
த்தில் எதையாவது இழந்து விடுவர்.
*ஒழுக்கம் ஒரு போர்க்களம் போன்றது.
அதனுடன் வாழவேண்டுமாயின் நாம்
ஓயாமல் மனத்துடன் போராடவேண்டும்.

**வன்னியூர் வளர்மதி,
மாஸ்கோ-ரஷ்யா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கல்கத்தா: பி.சத்யநாராயணன்;டெல்லி:இரா.ஜெயசேதுபதி;;கதிர்.சம்பத்குமார் கேரளா: பேராசிரியர் கே ஏ.ராஜாராம்;
ச.வெள்ளிங்கிரி;கைதராபாத்: என்.ஆர்.லட்சுமணன்: ரஷ்யா/மாஸ்கோ: க.சபாரத்தினம்; வளர்மதி சவுதிஅராபியா/ அல்.கதிவ்:
அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன் ;துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எம்.குமரேஷ்தாஸ்;

## மாஸ்கோவில் எனது மறக்க முடியாத அனுபவங்கள்!

### ஆரையம்பதி க.சபாரத்தினம்

மோசடி செய்யப்பட்ட கடவுச்சீட்டை ஆராய்ந்து பார்த்தேன்.ஜவுளி வியாபாரியும்,பொலிஸ் கான்ஸ்டபிளும் இணைந்து புகைப்படத்தை மட்டும் மாற்றிஅமைக்கவில்லை;அதிலுள்ள ஒவ்வொரு இதழையும் வெவ்வேறு கடவுச்சீட்டுகளின் தாள்களை இணைத்து புதியதோர் அற்புதமான படைப்பைச் செய்திருந்தனர்.ஒவ்வொரு கடதாசியும் வெவ்வேறு துவாரமிடப்பட்ட தொடர் இலக்கங்களைக்கொண்டிருந்தன.இதனை அந்த ரஷ்ய இமிகிரேசன் பொலிசாரும் கண்டு கொள்ளவில்லை என்பது தான் ஆச்சரியம்!
புதிய கடவுச்சீட்டின் பிரதானசிருஷ்டி கர்த்தாவான சீலன் அதுவரை நடுநடுங்கி வெலவெலத்துப்போயிருந்தார். எங்கே சிதம்பரநாதன் குட்டுகளை அவிட்டு விட்டுவிடுவாரோ?என எண்ணினார் அவர்.
அடிக்கடி தொலைபேசியில் என்னை சிரமப்படுத்திக்கொண்டிருந்த சீலன் சிதம்பரநாதன் விடுதலையானதும், தமிழர் பாணியில், என்னை மறந்தே போனார்.சீலன் உண்மையில் ஒரு ஜவுளிவியாபாரி அல்ல.பாஸ்போட் உற்பத்தியாளரும்,தந்திரமான வியாபாரியும் கூட என்பது அப்போதுதான் விளங்கியது.முன்பு கடவுச்சீட்டு காலத்தை நீடிக்க கூறிய காரணங்களும் பொய்யானவை என அறியவந்தது.
இருந்தும் நான் அமைதியானேன். எனினும் எச்சரிக்கையாக இருந்தேன்.உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் உத்தமர் உறவை நான் என்றுமே விரும்பியதில்லை.
சீலனின் நெருக்கம் குறைந்தது நலமே என எண்ணி நானும் என் கடமையில் மூழ்கிவிட்டேன்.
பலமாத இடைவெளிக்குப்பின் மீண்டும் சீலன் எம்பசியில்!
"ஐயா!எப்படி சுகமா?இந்தப்பக்கம் வந்து கொள்ள முடியவில்லை."
"விடயத்தைச்சொல்லும்!"
"சென்றவாரம் இலங்கை போய் இருந்தேன்.அங்கே ஆள்அடையாள அட்டை புதிதாகப் பெற்றிருக்கிறேன்.முந்திய இலக்கத்தை மாற் றி இதை பதிந்து தாருங்கோ!"
அதற்கு மேலும் என்னால் பொறுமையைக்கடைப்பிடிக்கமுடியவில்லை
"பலரைச்சிலகாலம் ஏமாற்றலாம்! சிலரை பலகாலம் ஏமாற்றலாம்! ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்றமுடியாது,சீலன்! போய்வாரும்! "என்றேன்.
"ஐயா!என்ன நடந்தது?ஏன்?ஏன்?"
"இலங்கையில் இருந்தபோதே அங்கு பதிந்திருக்கலாமே!தேசிய அடையாளஅட்டையை வெளிநாடு எடுத்து செல்லவேண்டிய அவசியமே இல்லையே.இங்கு வந்து பதிய வேண்டியகாரணமும் இல்லை. போய்வாரும்.உமது பம்மாத்துக்கு நான்தானா கிடைத்தேன்?பாவம்! தமிழன் என்று அன்புபண்பாய் நடந்தால் அதை மற்றவர் பலவீனம் என்று நினைக்காதேயும்! குட் பை ! என்று கூறி அனுப்பிவிட்டேன்.

## மாடியிலிருந்து வீழ்ந்த பாசையூர் இயேசு சீலனின் சோகக்கதை!

குறித்த அந்தநாள் இன்று ஞாபகம் இல்லை.ஆனாலும் சம்பவம் பசுமையாக மனத்திரையில் அசைந்து கொண்டிருக்கிறது.
மாஸ்கோ வொத்கினா அரசவைத்தியசாலையிலிருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது.
"இலங்கையர் ஒருவர் மாடியிலிருந்து வீழ்ந்து காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முறைப்பாட்டை பதிந்து கொள்வதில் சிரமம் உள்ளது.தமிழ் தெரிந்த அதிகாரியை அனுப்பிவைக்க முடியுமா?"என்றனர்.
ரஸ்யன்-ஆங்கிலம் தெரிந்த மற்றொரு மொழிபெயர்ப்பாளருடன் புறப்பட்டேன்.வொத்கினா எனும் பெயருள்ள ஒரு வைத்தியப்பேராசிரியரால் தர்மசிந்தனையுடன் பொதுமக்கள்,பிறநாட்டவர்கட்கு இலவசமாக அவசர சிகிச்சைக்கு உதவும்பொருட்டு உருவாக்கப்பட்ட தர்ம ஆஸ்பத்திரியே இது. 50க்குமதிகமான வைத்தியசிகிச்சை விடுதிகளும்,சகல வைத்தியபிரிவுகளையும் தன்னகத்தே கொண்ட ஒரு மாபெரும் வைத்தியகூடம் இது வாகும்.பலசதுர கி.மீ.நிலப்பரப்பில் அமைந்துள்ள இவ்வைத்தியசாலை மாஸ்கோ நகர வடக்கு எல்லையில் உள்ளது.
அதோ! கட்டிலில் ஒரு கரிய உருவம். முகவசீகரமும்,உடல்உரமும் கொண்ட ஒரு தமிழ் இளைஞன்! நாங்கள் அருகே சென்றதும் வாஞ்சையுடன் எழுந்து உட்காரமுயன்ற அவனால் அப்படி செய்யமுடியவில்லை.ஊனமுற்ற கால் எலும்புகள் வலியைக்கொடுத்திருக்க வேண்டும்.
"தேவையில்லை!அப்படியே படுத்திருங்கள்!என சைகை மூலம் காட்டி அவன் படுத்திருந்த கட்டில் ஓரம் சென்றேன்.மலர்ச்சி பெற்ற கண்களால் நன்றி உணர்வோடு வரவேற்ற அந்த இளைஞனின் முகத்தில் உற்சாகத்தின் சாயல் பரிணமித்திருப்பதை உணர்ந்தேன்.அந்த உடல்வலி,தனிமை,துயரம் என்பவற்றுக்கிடையேயும் இந்த உற்சாகம் அவன் உள்ளத்தே பிறந்ததற்கு காரணம் சக தமிழனான என்னை அந்த விபரீதமான இடத்தில் காணநேர்ந்ததுதான்.தமிழன்னையின் இணைப்பால் மலர்ந்த இதயத்துடிப்பை நினைந்து நானும் என்னுள் வியந்தவாறு மனமிரங்கினேன்.
"நீங்கள் இலங்கைத்தமிழர் தானே? உங்களுக்கு என்ன நடந்தது?"
கட்டுப்பட்டு இருந்த அவன் உணர்ச்சிகள் வார்த்தைகளாக விம்மி வெடித்தன.அவன் அழுகை எனக்கும் மனதைப் பிழிந்தது.
"ஐயா,நான் இனிச்செத்து மடிந்தாலும் கவலை இல்லை.எங்கே நம்மினத்தை சேர்ந்த ஒருவரையாவது சந்தியாது உயிர்பிரிந்து விடுமோ? என ஏங்கிக்கொண்டிருந்தேன்.ஏசுவின் வடிவில் வந்த உங்களைக்கண்டதும் என் கவலைகள்,துன்பங்கள் எல்லாம் பறந்தோடிப்போய்விட்டன.நான் கொடுத்து வைத்தவன்.இனி செத்தாலும் கவலை இல்லை!"
உணர்ச்சி வசப்பட்டு கூறிய அந்த இளைஞனின் கண்களில் வழிந்தோடிய கண்ணீர் ஆனந்தக்கண்ணீரா? துன்பக்கண்ணீரா?என்பது எனக்கு விளங்கவே இல்லை.
அந்த இளைஞனின் உணர்ச்சிபூர்வமான வார்த்தைகள் என் நெஞ்சைப் பிளந்தன.என் கண்களில் கண்ணீர்! ஒரு கணம் என்ன செய்வதென அறியாது திக்குமுக்காடினேன்.அந்த இளைஞன் உதித்த மானசீகமான வார்த்தைகள் இன்றும் மனதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.
அன்பான இனியமொழிகளால் அவனுக்கு ஆறுதலும்,தேறுதலும் கூறினேன்.நடந்து முடிந்த அந்தக் கோர சம்பவத்தை ஆறுதலாகச் செவிமடுத்தேன்.இரக்கம்,வீரம்,சோகம்,அர்ப்பணிப்பு,தியாகம் என பல அம்சங்கள் அதில் அடங்கியிருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவீடன் :எம்.என்.பாலாஸ்; பி.ஜெகத்சன்: ஜேர்மனி:தி.ஞானப்பிரகாசம்:421.589128;க.செந்தில்;0230478452;த. புவனேந்திரன் :0230474391; டென்மார்க்:ச.யோகேந்திரம் ;வ.க.பரமநாதன்;பிரான்ஸ்: செ.ஜெயகுமார்:த.தர்மசீலன் 1.43759171; இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்430599;விதுரன்: யாழ்ப்பாணம்:திருமதி.பி.ஹம்சானந்தி; செ.நடராசா மட்டக்களப்பு:கோபி.ரவி:மாத்தளை:

ரஷ்ய மொழிபெயர்ப்பாளர் மூலம். டாக்டர்களுக்கு.இவரை நன்கு கவனிக்கும்படியும் விநயமாகக் கூறினேன்.அடுத்த சில தினங்களில் டாக்டர்களின் வேண்டுதலில் இரத்தவங்கியிலிருந்து இரத்தமும் பெற்றுக்கொடுத்தேன்.

அடிக்கடி அங்கு சென்று அவனுக்கு ஆறுதல்கூறிவர விரும்பினும் மொழி அறிவின்மையும்,,அதிக கெடுபிடிகளும் தடைபோட்டன.

ஏசுநாதர் மேல் அயராதபக்தியும்.நம்பிக்கையும் கொண்ட அந்த இளைஞனுக்கு இன்முகம் காட்டி உதவி நல்க அங்கே பணிபுரியும் ரஷ்ய நங்கை ஒருத்தி கிடைத்தது, அன்னை மரியாளின் இறையருளே அன்றி வேறென்ன?மம்மி!மம்மி!! என அந்த ரஷ்ய மங்கையை அன்பொழுக அழைப்பான் அந்தத்தமிழ் இளைஞன்.அவளும் சிரமம் பாராது சிரித்தமுகத்துடன் பணிவிடை புரிந்து வருவதாகவே தெரிந்தது.அகதியாக வந்து மாஸ்கோவில் தவித்து,மாடியால் விழுந்தவனுக்கு அநாதைநிலையில் இனிய அன்புள்ளத்தை அளிக்கும், நல்மங்கையை சேர்த்தது இறைவனின் கருணையன்றோ?நம்பினார் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு!

**அன்று மாடியால் விழுந்தபோது நடந்தது இதுதான்:-**

நள்ளிரவு வேளைபனிக்கால மெத்தைகள் தடித்த பாய்களாகின.எங்கும் வெள்ளை வெளேரென பரவிக்கிடந்தன. மின்சார ஒளி அவற்றில் பட்டுத் தெறித்து இரவு பகல்போல ஜொலித்துக்கொண்டிருந்தது.இரவின் அமைதி.குளிரின் நடுக்கம் எல்லோரையும் உறக்கத்தில் ஆழ்த்தி பயங்கர மயான அமைதியை உண்டுபண்ணியது. கறுப்பின மக்கள் தெருவோர மாடி வீட்டில் குடியிருப்பதை அறிந்த ரஷ்ய மாபியா கொள்ளைக்கும்பல் ஆயுதம் தாங்கி வீட்டை முற்றுகையிட்டது. வீட்டில் இருந்த ஆண்கள்,பெண்கள், பிள்ளைகள் என சகலரும் பயப்பிராந்தி அடைந்தனர். துப்பாக்கி முனையில் ரஷ்ய வெறிநாய்கள் தமிழர் பணம்பண்டம்,நகைகள்,கடவுச்சீட்டுகள், அனைத்தையும்,கொள்ளையடித்தனர் இடநெருக்கத்தால் குசினிக்குள் படுத்திருந்த யேசுசீலனும்,அங்குவாழ்ந்து வரும் 5 வயது பாலகனும் இரகசியமாக வீட்டை விட்டு வெளியேறத்தீர்மானித்து பல்கனி வழியாக கடந்து சென்றனர்.பையனைத்தூக்கி அடுத்த வீட்டு மம்மியின் பல்கனிக்கூடாக பவுத்திரமாக நுழைத்து விட்டு,யேசுசீலனும் தாவிப்பாய்ந்து ஏறுகையில் கால்தடுக்கி ....ஐயகோ!.....அம்மா!!.... அந்தோ பரிதாபம்!.....கீழே மணலெனக் குவிந்து கிடந்த பனித்திடலில் நினைவு இழந்து வீழ்ந்து கிடந்தான். இடுப்பும்,இடதுகாலும் உடைந்துவிட்டது.கொல்லும் பனிக்குளிரில் அரை உயிரில் கிடந்த யேசுசீலனை யாரோ நல்ல உள்ளம் படைத்த ரஷ்யர் உதவியால் அம்புலன்ஸ் வண்டி வொத்கினா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றது.

யாழ்.பாசையூரைச்சேர்ந்த யேசுசீலனே,குடும்பத்தில் மூத்தபிள்ளை! ஆண்,பெண் சகோதரம் நான்குபேர். தந்தை கால் வழங்காத ஊனமுற்றவர் வறுமையின் கோரப்பிடியிலிருந்து குடும்பத்தைக்காப்பாற்றவும்,தங்கையர் இருவரை வாழ்க்கைப்புயலிலிருந்து தென்றலுக்கு அழைத்துச்செல்லவும் என மற்ற தமிழ் இளைஞர் போல் புறப்பட்டுவந்த பரோபகாரசிந்தனையாளனுக்கு விதி சதி செய்துவிட்டது. சோதனை மேல் சோதனை போதுமடா!சாமி!!வேதனை தான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி! மனிதன் நினைப்பதுண்டு-வாழ்வு நிலைக்குமென்று !இறைவன் நினைப்பதுண்டு-பாவம் மனிதனென்று! எனவே எண்ணத்தோன்றுகிறது.


**மரப்பெட்டிக்குள் தமிழ்ப்பெண்மணி**

---

மாஸ்கோ செரமித்தியோவ் சர்வதேச விமான நிலைய இமிகிரேசன் பொலிசாரிடமிருந்து திடீரென தொலைபேசி அழைப்பொன்று வந்தது.

"இலங்கைப்பெண் ஒருவர் போலிக் கடவுச்சீட்டை பாவித்து ஜேர்மன் செல்லமுயன்றபோது பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்.இது தொடர்பாக தூதரக அதிகாரி ஒருவரின் உதவி தேவைப்படுகிறது. தயவு செய்து உதவவும்."

வழமைபோல் இன்னுமொரு ரஷ்ய-ஆங்கில மொழிபெயர்ப்பாளருடன் புறப்பட்டேன்.அங்கு அடைந்தபோது ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. இமிகிரேசன் பொலிசார் மூவர் அமர்ந்திருந்தனர்.அவர்களுக்கு அப்பால் சற்று ஒதுக்குப்புறமாக பெட்டகம் போன்ற மரப்பெட்டி காணப்பட்டது. நாம் எம்மை பொலிசாருக்கு அறிமுகம் செய்து,வந்த விடயத்தை எடுத்துக் கூறினோம்.பொலிஸ் அதிகாரி



ஒருவர் எமை அழைத்துக்கொண்டு அந்த மரப்பெட்டி அருகே சென்றார். என்ன புதுமைமரப்பெட்டிக்குள் இருந்து எமது பேச்சு,காலடி ஓசை,என்பன கேட்டோ என்னவோ, பாம்பு படம் எடுத்து எழுந்தது போல் ஒரு பெண் உருவம் திடீரென எழுந்தது. ரோமாபுரி சாம்ராஜ்ய காலத்தில் ஆபிரிக்க அடிமைகளை இப்படித்தான் நடத்தி இருப்பார்களோ என்ற கற்பனை என்னுள் எழுந்தது.

ஒரு தமிழ்சகோதரியின் துன்பநிலை கண்டு,இதயத்தில் எழுந்த வேதனையை அதிர்ச்சியுடன் அடக்கிக் கொண்டேன்.தமிழரின் நிலை பிறந்தநாட்டில் மட்டுமல்ல,பிறநாட்டிலும் இப்படியா அமையவேண்டும்?யார் தமிழரின் இந்த அவலநிலைக்கு காரணமாக அமைந்தவர்கள்? அவ்வுருவத்தை நெருங்கி நிதர்சனமாக நோக்கினேன்.

மங்கலகுங்குமத்தின் மலர்ச்சியோடும்,துயர்கண்டு துவண்டு போகாத மனத்திடத்துடனும்,தீட்சண்யம் வாய்ந்த துருதுரு விழிகளோடும் பார்க்கும் அந்த நங்கை ஒரு தமிழ்நங்கை என்பதை முகமே காட்டியது. சிரிப்பு,அழுகை,சிந்தனை எதுவுமே இல்லாத ஒரு உருவத்தை அங்கு கண்டது ஆச்சரியமே தந்தது. சாதாரண தமிழ்ப்பண்பாட்டு சூழலில் வளர்ந்த தமிழ்ப்பெண்ணின் கலக்கம்,பதட்டம் இன்றி,திடமாக யந்திரம்போல் இருந்த அப்பெண்ணுக்கு வயதும் 20க்கு மேல் இருக்காது.

இலங்கைத்தமிழர் வாழ்வில் அடுக்கடுக்காக வந்த இன்னல்களைத் தாங்கியதால் அவர்கள் மனம் உறுதியாகிவிட்டது போலத்தெரிகிறது. நானே முதலில் பேசினேன்.(வளரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம்.அருள்பிரகாஸ்; தவ.சஜிதரன் **திருகோணமலை:**மதுமாரி **கண்டி:** எஸ் .மயில்வேந்த ன்; **அட்டன்**:பாலா சங்குப்பிள்ளை; **குவைத்**:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; **சுவிற்சலாந்த்**:எஸ்கதிர்காமநாதன்: 41.12724336; இரா. கலாதரன்; **அமெரிக்கா:** செ.பாஸ்கரன்; **அவுஸ்திரேலியா**:லெ.முருகபூபதி; **தென். ஆபிரிக்கா**:திருமதி.கமலா.வேலுப்பிள்ளை:**புரூணை**:எம்.ஐ.எம்.நகீப்

# கேரளக்கவிஞர் ஒளப்பமண்ணா சுப்ரமணியனின் கருத்தானபேட்டி

ச.வெள்ளிங்கிரி
பாலக்காடு-கேரளா.

காலங்களில் முக்காலம் உண்டு!அந்த முக்காலத்திலும் ஒரேநேரம் வாழ்ந்து கொண்டு இருப்பது கவிஞர்களே! இந்தக்கவிஞர்கள் கலைஞர்களே ஆயினும் சமுதாயத்தைச்சீர்திருத்தும் சீர்திருத்தவாதிகளில் முதலில் இருப்பது இவர்களே என்பதில் கருத்துவேறுபாடு குறைவு.அதனால் தானோ என்னவோ ,புரட்சி நடத்தி நாட்டை பிடிக்கும் சர்வாதிகாரிகள் கூட கவிஞர்களை வெட்டிச்சாய்க்கின்றனர்.சமுதாயத்தின் ஒளிச்சுடர்களாம் கவிஞர்கள் அணைந்தால் மக்கள் இருட்டிலேயே வாழ்வர் அல்லவா!மக்களும் ஆட்டுமந்தைகள் போல் ஏன்?என்ன?என்று கேளாது,ஒருவர்பின் ஒருவர் சென்று தம் வாழ்வையும் அழித்துக்கொள்வர்.

இந்த அறியாமையை :சமூகத்திற்கேற்பட்டிருக்கும் தீமைகளை உணர்ந்து முன் கூட்டியே எச்சரிப்பவன் தான் கவிஞன்! அதைக்கேட்டுக்கேட்டு தாமாகவே திருந்துவோர் சமுதாயத்தில் நிறைய உள். அதற்கு காரணம் கவிஞனின் பார்வையில் சுயநலம் இருந்ததில்லை;பொய்யும் பகையும் இருந்ததில்லை.அவன் சமூகத்தின் உள்ளேயே வாழ்ந்துகொண்டு அதற்கு வழியும் காட்டுகின்றான்.இது இல்லாமல் கவிஞனானோர் காலத்தால் நினைத்துப்பாராமல் போய்விடுவர். சரித்திரமும் அவர்கள் பெயரை உச்சரிக்காது.எந்தச்சமுதாயம் தம்முள் இருக்கும் கவிஞர்கள்,கலைஞர்களை மதிக்காமல் போகிறதோ,அந்தச்சமூகமும் சரித்திரத்தில் இடம்பிடிக்காது;சுபீட்சம் அடையாது!

சமூகத்தில் வாழும் ஒவ்வொருவருமே கவிஞர்களே! அவர்களுள் அவ்வப்போது கவிதைத்துடிப்புகள் ஏற்பட்டுக்கொண்டு தான் உள்ளன.ஆனால் சிலரால் அதை உணர்ந்து கவிதைவடிக்க முடிவதில்லை. சிலரால் அதை உணரவே முடிவதில்லை. இது வருத்தத்துக்குரிய செய்தியே. தம்முள் எழும் கவிதைத்துடிப்புகளை சிறைபிடித்து ,தன்கற்பனையையும் ஆற்றலையும் ,நேர்பார்வையையும் அளவாகக் கலந்து கவிதை படைப்போர் மிகச் சிலரே! அந்தச்சிலரிலும் தனியான இடத்தைப்பெற்று,மக்கள் மனதில் அரியாசனம் இட்டு கம்பீரமாக வீற்றிருப்பது ஒரு சிலரே!இவர்களில் ஒருவரே கவிஞர் ஒளப்பமண்ணா என அழைக்கப்படும்,திரு.சுப்பிரமணியன் நம்பூதிரிபாத் அவர்களாவர் இவர் ஒரு மலையாளக்கவிஞர் எனினும் தமிழ் ,மலையாளம் என வேறுபாடு பாராதவர்.தன் சமுதாயத்தை அறிந்துள்ளது போல் தமிழ்ச்சமுதாயத்தையும் அறிந்து வைத்துள்ளார்.வக்கிர எண்ணங்கள்,வேறுபாடுகளை நீக்கி கலைஞர்கள் சூரியன் உலகுக்கு ஒளிதருவதுபோல் ஒளிதர வேண்டும் என விரும்பும் ஒருவர் இவர்! மாற்றான் தோட்டத்து மல்லிகையையும் மதிப்பது தமிழர் பண்பாடு.அந்த வகையில் இந்த பிரபல கேரளக்கவிஞரை நம் "சர்வதேசதமிழரு"க்காக பேட்டிகண்டேன் மலையாளஎழுத்துலகில் தனக்கென ஒரு தனியிடம் பிடித்திருக்கும் இவரை மலையாளவாசகன் அறியாமல்போகமாட்டான். இவரின் முகம் இவனுக்கு தெரியாமல் போகலாம்.எனினும் இவரது கவிதைகளின் முகவரி தெரியாமல் போகாது.அவ்வளவு பிரபலமான இவரை எதுவித முன்னறிவிப்புமின்றி சந்திக்க அவர் வீடு சென்றேன் .அவர் உறங்கிக் கொண்டிருப்பதாக வீட்டார் கூறினர். சுமார் ஒருமணிநேரம் காத்திருந்தேன்.அவர் எழுந்து அன்புடன் வரவேற்றார்.வயதானதேகம்,தளர்ச்சியான நடை,கண்ணாடி அணிந்தமுகம் , எனினும் உற்சாகமான பேச்சு! சாய்வுநாற்காலியில் அமர்ந்துகொண்டு அவதானமாக என்னைப்பார்க்கிறார்.நம் "சர்வதேச தமிழர்" சஞ்சிகை பற்றி எடுத்துரைத்துவிட்டு மலையாள மொழியிலேயே என் கேள்விக்கணைகளைத்தொடுக்கிறேன். அதன் தமிழாக்கம் இதோ:-

கேள்வி:உங்கள் கவிதைகள் எப்போது முதல் வெளிவரத்தொடங்கியது?இது வரை நீங்கள் பெற்ற விருதுகள் பற்றிக் கூறுங்கள்?

பதில்:1945 முதல் என்கவிதைகள் தொடர்ச்சியாக வெளியானது.மாத இதழ்களிலும் ,வார இதழ்களிலும் வெளிவந்தது.அப்போதே பெரியகவிஞர்களின் தொடர்பும் கிடைத்தது.பலமுறை கவிதைமாநாட்டிலும் அவர்களுடன் கலந்துகொண்டேன். என் கவிதைகள் விசேட பதிப்பாகவும் வெளியிடப்பட்டன.

1950 களின் ஆரம்பத்தில் "அசரீரிகள்" எனும் தலைப்பில் புத்தரையும் ,காந்தியையும் வைத்து எழுதினேன். அந்தப் படைப்பை அன்றைய சென்னை அரசு மிகச்சிறந்த மலையாள படைப்பாகக்கருதி விருது கொடுத்தது.அதைத்தொடர்ந்து பல விருதுகள் கிடைத்தன.1966ல் கவிதையும்,கதையுமாக எழுதிய நூலுக்கு கேரள சாகித்யவிருதும்,1990ல் நிழலானால்! எனும் நூலுக்கு மத்தியஅரசின் அகாடமி விருதும்,ஓடக்குழல் விருதும் கிடைத்தன. " ஜாலகபட்சி " எனும் தலைப்பில் தேர்வுசெய்து தொகுக்கப்பட்ட கவிதைகட்கு,1992ல் என்.வி.கிருஷ்ணவாரியார் விருதும் கிடைத்தன.மேலும் பலவிருதுகள் கிடைத்தன.இதுவரை 20 கவிதைநூல்கள் எழுதியுள்ளேன்.அதில் 7 காவியங்களாகும்.

கேள்வி:பாடப்புத்தகங்களிலும் உங்கள் படைப்புகள் இடம்பெற்றனவா?

பதில்:பள்ளிக்கூட பாடப்புத்தகங்கள், பல்கலைக்கழக பாடப்புத்தகங்களிலும் இடம் பெற்றுள்ளன.

கேள்வி:வெள்ளைத்தாளில் எழுதிய கவிதைகள் முதன்முதலில் அச்சுருவில் வந்தபோது உங்கள் மனநிலை பற்றி.....?

பதில்:நன்றாக இருந்தது!நான் நூல்கட்கு படைப்புகள் அனுப்பமுன்பே ,சமூகத்தில் ,மக்களின் பார்வையில் கவிஞனாகி விட்டேன். இதற்குக்காரணம் நான் அன்றே மக்களுடன் அதிகதொடர்பு வைத்துக்கொள்ளவும்,பொதுக்கூட்டங்களில் பேசவும் வாய்ப்பு கிடைத்தது தான்! அதேபோலவே என்வீட்டிலும் நான் கவிஞனாகிவிட்டேன். ஆகவே அது எனக்கோ மற்றவர்கட்கோ அதிக ஆச்சரியம் தந்தது எனக்கூறமுடியாது. எனினும் 1947ல் என் முதல் கவிதைத்தொகுப்பு வெளியானபோது கேரளாவில் அன்றிருந்த மிகப்பெரிய கவிதை விமர்சகர்கள் அதனைப்படித்து பாராட்டி எழுதியது எனக்குள் சுயநம்பிக்கை ஊட்டியது.

கேள்வி:இன்றைய மலையாள இலக்கியம் போகும் பாதை பிடித்திருக்கிறதா?

பதில்:இன்றையநிலை அவ்வளவாகப்பிடிக்கவில்லை.சர்வதேச அளவில் பேசப்படுமளவுக்கு கேரளாவில் கவிஞர்கள் உண்டு. அவர்களின் நற்படைப்புகள் உலகின் பல பாகங்களில் பேசப்படுகிறது.எனினும் அவர்களின் எண்ணிக்கை குறைவே! இன்றையகவிஞர்கள் மேற்கத்தைய மோகத்தில் ஆட்பட்டுள்ளனர்.படைப்புகள் அதைத்தான் காட்டுகின்றன.அதிகளவில் அப்படியான பாட்டு,கவிதை,கலைப் படைப்புகள் தான் வெளிவருகின்றன. எனினும் அன்றாடவாழ்வு,இயற்கை, சமூகம் பற்றிச்சொல்லும் கவிதைகள் குறைந்து கொண்டு வருகின்றன.மண்ணின் மணம் இல்லாமல் வெளிவரும் கவிதைகட்கு மக்களின் மனதில் இடம்பிடிக்க முடியாது!எங்கு இலக்கியத்தின் சக்தி குறைகிறதோ,அங்கு அப்போதே,உண்மைக்கு தோல்வி ஏற்படுகின்றது.இது எல்லாத்துறைகளுக்கும் பொருந்தும்! எனினும் நிலைக்களம் மாறும்.ஒரு நாட்டிற்கு ஏற்படும் சீரழிவு காலப்போக்கில் இயற்கையால் சீராகுவது போல் கவிதைத்துறையும் இயற்கையால் சீராகும் என நம்புகிறேன்.

கேள்வி:அன்றைய குருகுலவாசத்திற்கும் இன்றைய பள்ளிக்கூடமுறைக்கும் ,வேறுபாடுகளெனினும் சிறப்பானது எது?

பதில்: குருகுலவாசம் தான் சிறந்தது என்பேன்.எனினும் இன்றைய காலகட்டத்துக்கு அது முழுமையாகப் பொருந்தாது.ஆனால் அதில் உள்ள நல்லவற்றை எல்லாம் தேர்ந்தெடுத்து இன்றைய கல்விக்கூடங்களில் வைத்தாகவேண்டும். குருகுலவாசத்தினால் கலையும் ,கவிதையும் சேர்ந்திருந்த துறைகளில் மாணவர்களின் அறிவும்,ஆற்றலும் மிகப் பெரியஅளவில் வெளிப்பட்டது;வளர்ந்தது! இன்றையநிலை அப்படி இல்லை! அன்றைய நிலையில் மனதில் சஞ்சலம் புகாது மனதை ஒருநிலையில் கட்டிவைத்து கற்றுக்கொடுப்பர்.பின்பு வாழ்வுக்கு அது நன்குதவும்.சமூகமும் அன்று நல்ல முறையில் இருந்தது.இன்று குழந்தைகட்கு அத்திவாரமே தளர்ந்திருக்கிறது.

கேள்வி: ஒருமனிதனுக்கு எது முக்கியம்?

பதில்:குடும்பவாழ்வு தான் முக்கியம்! பெற்றோர்,மனைவி,பிள்ளைகள்,சகோதர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழரில் வரும் கதைகளின் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே!வாசகர் கடிதங்கள் வரவேற்கப்படும்.
ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் வரவேற்கப்படும்.
ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு.
நோர்வேயில் தமிழ் மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.

ம்,உற்றார்,உறவினர் ஆகியோர் உறவில் வாழவேண்டும்.அப்போது தான் அவனுக்கு உலகமும் உறவும் தெரியும்! நம்கடமைகள்,மனதுள் அன்பு,வெளியில் கொடுக்கல் வாங்கல் என்று நம்வாழ்வையும்,வாழ்க்கை முறையையும் அது படிக்க வைக்கிறது!

கேள்வி:கூட்டுக்குடும்பம் பற்றி.....?

பதில்:இன்று பல பக்கங்களிலும் கூட்டுக் குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன;பிரிகின்றன.இது நல்லதல்ல.மனங்கள் இணைந்துவாழும் அந்த இடம் ஒருகோவில் தான்! இங்கு அடுத்தவர் மனதை புரிந்து வாழல் சாத்தியம்!பெரியவர் வழிகாட்டலில் அது மேலும் வலுப்படும். அனாதையாகும் பிள்ளைகள் அன்புடன்,இரக்கத்துடன் வளர்க்கப்படும்.பிரிவதால் அனைவர்க்கும் தனிமை உணர்வு உண்டாகிறது. சேர்ந்து வாழல் மனிதர் பண்பு!அங்கு சுயநலம்,ஆணவம்,வெறுப்பு, வராது; நல்ல கூட்டுறவு சகலர்க்கும் வேண்டும்!

கேள்வி:பலருக்கும் "நவீன ஓவியம்" புரிவதில்லை.இதன் எதிர்காலம் சமூகத்தில் எப்படி இருக்கும்?

பதில்:பலருக்கு மனதில் புரியும் கவிதைகளும்,ஓவியங்களும் சிறந்தது என்று கூற முடியாது!ஆனால் நவீன ஓவியங்கள் இன்று அதிகளவில் வரையப்படுவதுடன் பல ஆத்மபாவங்களை வெளிப்படுத்துகின்றவையாயும் உள்ளன.இதைப்புரிவதாயின் பல விடயங்களின் அறிவும்,பொதுநோக்கும் அவசியம் ! தெரியவில்லையே!என்பதைவிட ஏன் தெரியவில்லை? என எண்ணி அங்கு அறிவுபூர்வமாக சிந்தித்தால் இந்த நவீன ஓவியம் எல்லோர்க்கும் புரியும் !இந்த நவீன ஓவியம் வளராமல் ஒதுக்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கை எனக்கு சிறிதுகூட இல்லை.

கேள்வி:நீங்கள் கவிதை எழுதக்காரணம் என்ன?உங்கள் திறமை மட்டுமா?

பதில்:என் மனதில் எங்கோ இருந்து இந்த அறிவு;உணர்வு ஆத்மார்த்தியாக வருகிறது!அதை நான் வெளிப்படுத்துகிறேன்.அது கடவுளின் விருப்பம்!கடவுளின் வழிகாட்டலில் கவிதை படைக்கிறேன்!

கேள்வி:கடிகாரம் காலத்தின் கழிவைக் காட்டுகிறது.அதற்கு ஏன் துயரஓசை வைக்காமல் நல்ஓசை வைக்கவேண்டும்?

பதில்:மனிதவாழ்வு துயரம்,துன்பம் நிறைந்தது.பிறக்கும்போதும்,இறக்கும்போதும் அழுகின்றோம். இடைப்பட்ட காலத்தை ஆனந்தமாக மாற்றி வாழவேண்டும் என்பதால்தான் நல்ஓசை வைத்துள்ளனர்.

கேள்வி:அரசியல்வாதிக்கும் ,கவிஞனுக்கும் என்ன வித்தியாசம்?

பதில்.அரசியல்வாதிக்கு பதவிநாற்காலி வேண்டும் ! கவிஞனுக்கு மக்கள் மனம் எனும் இருக்கை வேண்டும்! அதை மையமாக வைத்தே இருவரும் தங்கள் காய்களை நகர்த்துகின்றனர்.அரசியல்வாதி வாழ்நாள் முழுவதும் தன்பெயர் பிறர் சொல்லவேண்டும் என விரும்புகிறான். அதற்குமேலும் தன்பெயர் சொல்வார்கள் என்ற நம்பிக்கை அவனுக்கு வருவதில்லை .அவன் பிறர் உதவியுடன் கும்பலாக செயல்படுகிறான்.ஆனால் கவிஞன் தனியாளாக தன்மனதுடன் உறவாடி செயல்பட்டு உலகம் உள்ளவரை தன்பெயரை



ச.வெள்ளிங்கிரி

நிலை நிறுத்த,சமுதாயத்தை சீர்திருத்த சுயநலமின்றி செயல்படுகிறான்.நேர்வழியில் அதற்காக நீண்டபயணம் நடாத்துகிறான்.

கேள்வி:நம்தாய்மொழிக்காக மாநாடு நடத்துவது அவசியமா?

பதில்:ஆமாம்! அவசியம் தான்.நம்தாய் மொழிச் சிறப்பு,கலை,கலாசாரம்,வாழ்க்கைமுறை பற்றி வெளிப்படுத்த இது சிறந்த வாய்ப்பு!நம்தனித்தன்மையை வெளிப்படுத்தி நம்கலாசாரங்களைக் கடைப்பிடித்து வாழவேண்டும்.நம்முள் பலவேறுபாடுகள் இருப்பினும் ஒற்றுமை உண்டு.பாரதம் பலமொழி,பலஇனம் உள்ளடக்கியநாடு எனினும் பாரதம் என்ற சொல் நம்மை ஒன்றுசேர்க்கிறது. வேற்றுமொழிகளின் வரவால் மக்களுக்கு அவற்றின் மோகத்தால் நம்தாய்மொழி அடிபட்டுப்போய்க்கொண்டிருக்கிறது. அந்தநிலையை மாற்றவும் இம்மாநாடுகள் உதவலாம்.

கேள்வி:இலங்கைப்பிரச்சனை எவ்வழியில் தீரவேண்டும் என நினைக்கிறீர்கள்?

பதில்:தமிழர்களுடைய தனித்தன்மை நிலைநிறுத்தப்படல்வேண்டும்.அதிகாரம் ஆட்சியில் அவர்கள் சமஅளவில் பங்கு கொள்ள வாய்ப்பளிக்கவேண்டும். மட்டம் தட்டக்கூடாது.தமிழர் பாரம்பரியம்,கலாசாரம் உட்கொண்டது தான் இலங்கைக் கலாசாரம்! சகலதுறையிலும் அவர்கட்கு சம வாய்ப்பு கொடுத்து அமைதியை நிலைநாட்டிட வேண்டும்.அதே சமயம் இன,மொழி அடிப்படையில் பிரிவதும் சரியல்ல.

கேள்வி:பெண்கள் சமுதாயம் இன்னும் இந்தியாவில் அடிமைப்பட்டுள்ளதா?

பதில்:ஆமாம்! இன்னும் ஆண்கள் அவர்கட்கு உரிய இடம் கொடுக்கவில்லை. அதை வழங்க விரைவு வேண்டும்! தயக்கம் கூடாது!ஆண்களை விட பெண்களே முயற்சியில் திறமையானவர்கள்!

கேள்வி:இளந்தலைமுறைக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

பதில்:தேசத்தின்ஒற்றுமைக்கும்,முன்னேற்றத்துக்கும் பாடுபடவேண்டும்.தைரியம் கைவிடாமல் இலட்சியப்பாதையில் போகவேண்டும்.தியாகம் செய்யவேண்டும். கடமையைச்செய்பலனை எதிர்பாராதே!! என்பதுபோல் ,லாப நட்டம் பாராது,தேச முன்னேற்றத்துக்கு பாடுபடவேண்டும், என்று கூறி தன்பேட்டியை நிறைவு செய்தார் கேரளக்கவிஞர் ஔப்பமண்ணா! அவருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

(இளம் கவிஞர்கள் கேரளத்துக்கவிஞரின் அரிய ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு புதியசமுதாயம் காணஎழுச்சியுடன் புறப்படுக! என வேண்டி, இணைப்பாளர் ச.வெள்ளிங்கிரிக்கு எம் இதயபூர்வமான வாழ்த்துக்கள்!நன்றிகள்!!ஆ-ர்)

## சர்வதேச தமிழர் தகவல்சேவை
## International Tamils Info.Service.

1.தமிழீழவிடுதலைப்புலிகளின் குரலாக பாரிஸிலிருந்து "எரிமலை"கடந்த பல்லாண்டுகளாக வெளிவருகிறது.ஈழப்போராட்டம் பற்றிய செய்திகள்,ஆக்கங்கள் நிரம்பிய "எரிமலை"யுடன் "சர்வதேசதமிழர்"கருத்து,தகவல் பரிமாற்றம்,மாற்றீடு மேற்கொள்ளும்.பாரிஸ்,ஒஸ்லோ தமிழர் இணைப்புக்குழுக்கட்கு நல்வாழ்த்துகள்!

Erimalai-T.C.C.France,
341,Rue des Pyrénés,
75020 Paris,France

---

2.அமெரிக்காவில் 6 கிழமை ஆங்கில பாஷை/ரோ.:பல் பரீட்சை கோடை பயிற்சி மேற்கொள்ள: (10-18 வயதுள்ளோர்)

Cushing Academy,
Ashburnham,MA01430,U.S.A.
Tl.508.827.7700Fx.508.827.6927

---

3.பிரிட்டனில் சினிமா,ரீ.வி.மல்ரி மீடியா துறையில் 2மாதம்-2வருடகாலகல்விக்கு:

The European Media School,
Jane.Little/Store Hills Studios,
Shields rd,Gateshead,Type&Wear,
England, NE10 0HW
Tel.44.191495.2727 Fx.495.2266

---

4.நெதர்லாந்தில் .:.பிசியோதெரபி கல்வி: செப்.95-யூலை 99 வரை

Hogesschool Enschede,
Dept.of Physioterapy,PB.70000,
7500 KB Enschede,The Nederland

---

5.சுவிற்சலாந்தில் ஹோட்டல்,உல்லாசபயண கல்விக்கு:

Hotel & Tourism School/HOSTA,
1854 A-Leysin,Switzerland
Tl.41.25.342611Fx.41.25.341821

---

6.சுவிஸில் ஹோட்டல் நிர்வாக கல்விக்கு:

Hotel Consult SHCC college,
CH-1897 LeBouveret ,Switzerland
Tl.41.25.813862Fx.41.25.813650

---

7.சர்வதேச குழந்தைகள் கவனிப்பு சங்கம்

ChildWatch International,PB.1132
,Blindern,0317 Oslo,Norway
Tel.47.22.854350Fx.22.855028
e.mail.Internet:childwatch@uio.no

---

8"ஐரோப்பா தமிழர்" எனும் தகவல்நூல் லண்டனிலிருந்து வரவுள்ளது.ஆசிரியர்: டாக்டர் எஸ்.குணசிங்கம் இணைப்பாளர் ஏ.எஸ்.மூர்த்தி;தகவல்:ஐ.தி.சம்பந்தன். உங்கள் விபரங்களை ஐ.தமிழர் அனுப்புக!

Intl.Centre for Tamil Affairs,
Flat.1-198,Neville Rd,
London E79QN,England



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேச தர தொடர் இலக்கநிலையம்/யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443
தரமான ஆக்கங்கள்,ஓவியங்கள்,புகைப்படங்கள்,காட்டூன்கள் மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.
மிகத்தரமான பேட்டி,சிறுகதை,கட்டுரைகட்கு,நோர்வே லொட்டரி பரிசாக அனுப்பப்படும்.

# 19 நூற்றாண்டுகளின் தமிழ்க்கவிதையின் பரிமாணங்கள்!

**பேராசிரியர் வ.மாசிலாமணி**
**அண்ணா பல்கலைக்கழகம்.**

பாரதி 20ம் நூற்றாண்டுத்தமிழ்க்கவிதை
யின் எழுஞாயிறுகாடு மணக்க வந்த
கற்பூரப்பூங்கா!

இந்தப்புலவனின் இந்தக்கவிஞனின் வீரி
யத்தை முழுமையாகவும் சரியாகவும்,புரி
ந்து கொள்ள வேண்டுமெனில் அவனுக்
கு பரம்பரைச்சொத்தாக வந்த 19 நூற்
றாண்டுத் தமிழ்க்கவிதையின் மரபையும்
ஒரு பஞ்சகல்யாணிக்குதிரையில் ஏறிப்
பார்த்து வந்துவிட வேண்டும்.

தமிழின் முதல்நூல்,முதன்மையான
நூல்,முற்றக்கற்ற ஒரு முனைவனின்
நூல் தொல்காப்பியம்.இது சுமார் 2000
ஆண்டுகள் வயதுடையது.(இது 3000 ஆ
ண்டு பழமைவாய்ந்தது என்றும்,இதற்கு
முன்னும் சங்கமேறிய பல தங்க நூல்கள்
இருந்தனவென்று பலர் கூறுவர்.இவர்க
ளுடைய பேரார்வங்களுக்கு நிறைய"தள்
ளுபடி"கொடுத்துக்கணக்கிட்டால் கூட
த்தொல்காப்பியன் தலைநிமிர்ந்து நிற்
பான்.)

தொல்காப்பியன் ஒரு இலக்கணநூலா
சிரியன் மட்டுமல்ல;எழுத்துகளின்,சொல்
லின்,புணர்ச்சியையும் திரிபையும் மட்டும
ல்ல,மனிதர்களின் உரசல் பற்றியும்,மனித
ச்சிந்தனையின் பரிணாமம் பற்றியும்கூட
அவன் பாடியிருக்கிறான்.ஆழத்திற்கும்
அகலத்திற்கும் இவனோடு அரிஸ்டாட்டி
லைத்தான் ஒப்பிடக்கூடும்.நாடகவியல்
பற்றிய கருத்தும்,நூல்களை(புத்தகங்க
ளை) ப்பற்றிய கருத்தும்,இன்றைய சிந்த
னையாளர்களை மலைக்கவைக்கும்.

இவரது வரையறைகளைப்பின்பற்றியே
பெரும்பாலும் மூன்றாம் சங்கத்து பதி
னெண்மேல்கணக்கு,கீழ்க்கணக்கு
நூல்கள் எழுந்தன.இவை கி.பி.1இலிருந்
து சுமார் கி.பி.300 ஆண்டுகள் வரை தமி
ழில் முகிழ்ந்த பூக்கள் எனலாம்.

இந்தப்பதினெண்மேல்க்கணக்கில் பத்து
ப்பாட்டு,எட்டுத்தொகை நூற்கள் அடங்
கும்.இவற்றின் உயிர்ப்பு(theme)அகமு
ம் புறமும் தான்.ஒரு அணங்கைக்கண்டு
ஆறாக்காதல் நோய் கொள்ளுதல்,அவ
ளுக்காக அவன் ஏங்குதலும்,அவனுக்கா
க அவள் நினைந்து புலம்பலும்,வாய்ப்பு
கிட்டியபோது கூடலும்,அது திகட்டும்
போது ஊடலும்,பின்னர் கூடலும்,பின்ன
ர் ஓடலும் அனைத்தும் அகம்.மன்னர்க
ளின் மோதல்;போர்வீரம்,கொடை முதலி
ய புறத்தில் அடங்கும்.இந்த அக,மற்றும்
புற உணர்வுகளை வெவ்வேறு வடிவில் ;
வண்ணத்தில் அற்புதமாகக்காட்டுபவை
மேல்க்கணக்கு நூல்கள்.

இப்போது 1995ல் தமிழில் பரவலாக எழுத
ப்பட்டுவரும் நுண்மையான புதுக்கவி
தைகளின் (abstract modern or
new wave poetry)பழையபாணியாக
க் குறுந்தொகைக்கவிதைகள் இருப்பது
வியப்பாக இருக்கும். இதுபற்றிப்பின்னர்
விபரிப்போம்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்
அனைத்தும் அறிவுரை நூற்கள்.பெளத்த
சமணமதக்கருத்துக்கள் ஆழமாயும்,அக
லமாயும் பலநூற்களில் போய் உள்ளன.
இந்தத்தொகுப்பில் ஒரு அருமையான
நூல் திருக்குறள்.இந்த எளிய நூலுக்கு
ஒப்பிட்டுச்சொல்வதற்கு பிறமொழியில்
இலக்கியம் இல்லை. கிரேக்கத்து மார்க
ஸ் அரேலியஸ் அல்லது சீனத்துக்கன்பூ
சியஸ் மட்டுமே இவரருகில் வரமுடியும்.
திருக்குறள் ஒன்றுக்காகவே நாம் தமிழ
ராகப்பிறந்ததற்குப் பெருமைப்படலாம்.
இங்கே மிக முக்கியமாகக்கருத வேண்டி
யது யாதெனில் மேற்குறித்த சங்கநூல்
கள் அனைத்தும் இம்மை வாழ்க்கைக்
கவிதைகள்(secular poetry).அன்றா
ட வாழ்க்கை நிகழ்ச்சிகளை அப்படியே
படம்பிடித்து,உள்ளே ஒரு கருத்தைப்
பொதித்து,ரசனையோடு எழுதப்பட்ட"நவ
கவிதைகள்".

அடுத்து வருபவை ஐம்பெரும்,ஐஞ்சிறு
காப்பியங்கள்.இவற்றில் சிலப்பதிகாரமும்
மணிமேகலையும் சிறந்தவை. வட இந்தி
யாவிலிருந்து வந்த பெளத்த ,சமணக்கரு
த்துக்கள் தமிழர் சிந்தனையில்; வாழ்க்
கையில் ஆழமாக வேரூன்றி விட்டன
என்பதைக் காட்டுபவை.இவற்றில் சிலப்ப
திகாரம் உண்மையிலேயே ஒருசிறந்த
நாடகக்காப்பியம்.ஷேக்ஸ்பியர் உண்மை
யிலேயே இவரிடம் கைகட்டி நிற்கவேண்
டும்.இந்தக்காலகட்டத்தில் தான் ஒரு
தலைவன் பற்றியோ,தலைவி பற்றியோ
கதைநாயகராகக்கொண்டு அவர்களின்
எழுச்சி பற்றியும்,வீழ்ச்சி பற்றியும் காவிய
ம் உருவானது.எனவே இது காவியக்கால
ம் எனலாம்.(கி.பி.300-500 வரை)

இடையே சுமார் ஒருநூறாண்டுகளாவ
து தமிழில் பெரிய இலக்கியம் வராத ஒரு
மெளனம் நிலவியதாகக்கொள்ளலாம்.
பின்னர் தொடங்கியது அப்பர்-அதாவது
திருநாவுக்கரசர் தொடங்கிவைத்த பக்தி
இலக்கியகாலம்.சைவநாயன்மார்களும்,
வைஷ்ணவஆழ்வார்களுமாய் சுமார் 400,
500 ஆண்டுகளாய் பக்திச்சுவை சொட்ட
ச்சொட்ட ஆயிரக்கணக்கான பாடல்க
ளை பாடி நிறைந்தார்கள்.இந்தக்கால
கட்டத்தில் அனைத்தும்,கடவுள் வழிபாட்
டுப்பாடல்கள் தாமே தவிர :அகம்,புறம்
பற்றிப்பேசுவது அநாகரீகமாகக்கருதப்
பட்ட சூழலும் இருந்து வந்திருக்கிறது.
இவர்கள் காலம் 7ம் நூற்றாண்டிலிருந்
து சுமார் 13ம் நூற்றாண்டு வரை
எனலாம்.தமிழகத்தில் தொடங்கிய பக்தி
இயக்கம் இந்தியா முழுமையும்,பரவிச்செ
ன்றுள்ளது.ராஜஸ்தானத்து மீராவுக்கு
முன்னோடி "சூடிக்கொடுத்த சுடர்க்
கொடி"ஆண்டாள் எனில் அது மிகையா
காது.

மேலே குறித்த 7-13ம் நூற்றாண்டு வரை
தமிழின் பொற்காலம் எனலாம்.ஏனெனி
ல் இந்தக்காலகட்டத்தில் தான்,மாமல்ல
ன் ராஜராஜன்,ராஜேந்திரன் போன்ற மா
மன்னர்கள் இருந்திருக்கிறார்கள்.
தமிழகம் இந்தியக்குறுகிய எல்லைகடந்
து,கடல்கடந்து ஈழத்திலும்,கிழக்காசியப்
பகுதிகளிலும்,ஆழமாக காலூன்றியது.
அகண்ட தமிழகம் (Greater Tamil
na du)என ஒன்று உருவானது.

அடுத்து வந்தவர்கள் குறுநிலமன்னர்கள்
வேற்றுமொழிமன்னர்கள் பலபகுதியிலும்
பலஆண்டுகள் வேர்விட்டு வளர்ந்ததால்
சிற்றிலக்கியங்கள் மட்டுமே எழுந்தன.
புலவர்களைக்காக்கும் சில புரவலர்கள்
மட்டுமே இருந்தனர்.பெருநோக்கு
கொண்ட பேரரசர்கள் இல்லை.எனவே
புரவலர்களை மகிழ்விக்கவும்,அவர்கள்
அந்தப்புரத்தில் அகமகிழவும்,அவர்கள்
ராஜசபையில் தேஜஸ்வரவும் கவிதைகள்
எழுதப்பட்டன.இதன்காரணமாகவே
கவிதைகளில் உள்ளத்தின் ஒளிபொங்கவி
ல்லை.உத்வேக எழுச்சியில்லை.யமகம்,
திரிபு போன்ற சொற்சிலம்பமும்,கழைக்
கூத்தாடியின் கால்வண்ணமும்,கைவண்
ணமும் கவிதையில் போட்டியிட்டன.
இந்த நலிவுகள் பல ஆண்டுகள் தொடர்
ந்தன.18,19 நூற்றாண்டுகளில்,ஆங்கி
லேயர் அரசர்களை எல்லாம் விழுங்கிவிட்
ட நிலையில் நல்லகவிதை ஒன்றுக்கு 400
நாட்கள் காத்திருக்கவேண்டியதாயிற்று.
கவிதைக்குத்தான் இப்படி ஒரு கஷ்டகா
லம் என்று சொல்லவேண்டுமே தவிர
தமிழ் இலக்கியத்திற்கு அல்ல.ஏனெனில்
தமிழ்வளர்க்கும் பொறுப்பு பெரும்பாலும்
மடாதிபதிகளிடமும்,ஒருசில குறுநிலப்
பெருந்தகைகளிடமும் சென்றுவிட்ட
நிலையில்,மதஆராய்ச்சி நூல்களும்,
சைவசித்தாந்த நூல்களும்,மனையடி
சாஸ்திரம் போன்ற நூல்களும் எழுந்தது
இந்தக்காலகட்டத்தில் தான்.

தாயுமானசுவாமிகளின் தத்துவக் கவிதை
களும்,அருணகிரிநாதரின் சந்தக்கவி
தைகளும்,பதினெண்சித்தர்களின்
படையலும் சுமார் 400 ஆண்டுகள்
பரவியது. இந்தக்காலகட்டத்தில் தான்!

கவிதைக்கு இன்னொரு பக்கம் இருந்
து வந்தது இடி. அதுதான் ஆங்கிலேயர்
கொண்டுவந்த உரைநடை.

அவர்கள் வருகைக்கு முன் தமிழில்
எழுதப்பட்டவை-எதைப்பற்றி
எழுதினாலும்-பெரும்பான்மை கவிதை
வடிவே.சிறுபான்மையே உரைநடை.
ஆனால் ஆங்கிலேயர் வருகைக்குப்பின்
எழுதப்பட்டவை பெரிதும் உரைநடையே;
சிறுபான்மையே கவிதைநடை.

அச்சுப்பதிப்பு இந்தமாற்றத்துக்கு
துணைபோகியது எனினும்,அவசர வாழ்
க்கை தான் இதற்கு அடிகோலியது.
எனினும் இந்த இலக்கியப்போக்குக்கு
ஒரு விதிவிலக்கு,இராமலிங்க சுவாமி
களின் திருவருட்பா.தமிழகம் முழுமையும்
ஆன்மீக உணர்வையும்,அருணர்வையும்
பழகுதமிழால் நிறையச்செய்தவர் இவர்.
"இந்த உலகம் ஒரு மாயையார் ஆண்
டால் என்ன?யார் மீண்டால் என்ன?நெற்
கொண்டு போம் மட்டும் நில்லாய் நெடு
ஞ்சுவரே....!என்றவொரு வெறுமைச்சிந்த
னை ஆழமாகவும்,அகலமாயும் பரவி
இருந்த வேளையில்,மீசையை முறுக்கிக்
கொண்டு வந்த இளஞாயிறு தான்
பாரதி என்ற புதுமைக்கவிஞன்!....வளரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
தமிழார்வலர்,எழுத்தாளர்,நூலக முகவரிகள் தந்துதவுக,தகவல்சேவைக்கு விபரங்கள் தருக!
தகவல் சேவை பலாபலன்களை வாசகர்களுடன் பகிரலாம்.சந்தா தந்து ஊக்கம் அளியுங்கள்!

# அதிசய நடனம்



04 – 03 – 95 அன்று வார்டோத் தமிழ்ச் சங்கத்தால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது . அதில் பல நிகழ்ச்சிகளும் வியக்கத் தக்க அளவில் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டமை வார்டோ , வாட்சோ வாழ் அனைத்து மக்களையும் இன்பத்தில் ஆழ்த்தியது. அங்கே ஒரு அபூர்வ ஆட்டத்தை நாம் கண்ட போது திகைப்பு ஏற்பட்டது. இது மூன்றாவது முறையாக இருந்தாலும் எமக்கு அந்த ஆட்டம் அதிசயமாகவே இருந்தது.

கலை என்பது எல்லோருக்கும் அமைந்து விடும் ஒன்றல்ல. அது ஆண்டவனால் கொடுக்கப்படும் கொடை என்பதை மறக்க முடியாது என நான் இந்தச் சிறுமியின் ஆட்டத்தைக் காணும் போது உணர்ந்து கொண்டேன்.

புலம் பெயர்ந்து வாழும் எங்களுக்குள் இப்படிப் பட்ட திறமைகளும் இருக்கின்றது என்பதையிட்டு நாங்கள் நிட்சயமா மகிழ்ச்சி அடையலாம். நாங்கள் இங்கு வந்து வேலை செய்து பணத்தை மட்டும் சம்பாதித்துக் கொள்கின்றோம் என்கின்ற கருத்துமட்டும் நிலைக்காது. எங்களாலும் பலவிதமான திறமைகளையும் வெளிக் கொண்டு வரமுடியும் என்பதிற்கு இவரது நாட்டியக் கலை ஒரு உதாரணம்.

இந்தக் கலையையும் எமது மொழி காலாச்சாரம் சார்ந்த முறையான கலையாக பெற்றோராகிய நாம் அக்கறை கொண்டு வளர்க்க வேண்டும்.

முறையான பயிற்சி இல்லாது ஒலிஒளிப்பேழைகளைப் பார்த்து ஒவ்வொரு அடியாக வீட்டிலே ஆடத்தொடங்கி இன்று ஒரு பாட்டு வந்தால் அதன் அனைத்து அபினயங்களையும் அப்படியே மனதில் வைத்து சினிமாவைவிட அற்புதமாய் எல்லோராலும் ஆடிவிடமுடியாது. அந்தத் திறமை இந்தச் சிறுமிக்கு கிடைத்திருப்பது அதிசயிக்கப்பட வேண்டியதோடு சந்தோசப் படவேண்டிய விடயமும் ஒன்று.

மற்றைய மனிதனைத் துன்பப் படுத்தவே பல மனிதர்களால் முடிகின்றது. அதுவே அன்றாட வாழ்கையில் உலகத்தில் சர்வசாதரணமாக நடக்கும் ஒன்று. ஒருசில மனிதர்களாலேயே மட்டும் மற்ற மனிதர்களை சந்தோசப் படுத்த முடிகிறது.

இந்த அற்புதப் பணியை நாட்டியத்தால் நிச்சயம் செய்ய முடியும் என்பது உலகறிந்ததே. அந்த வகையில் இந்தச் சிறுமியும் தனது திறமையால் மற்றவர்களைச் சந்தோசப் படுத்தும் பாக்கியம் பெற்றுள்ளார்.

சினிமாவிலே வெட்டி வெட்டி ஒருபாட்டைத் துண்டு துண்டாக எடுத்துப் பொருத்தி அதைக் காட்டுவது ஒன்றும் அதிசயிக்கப் படவேண்டிய ஒன்றல்ல. அதேநடனத்தை தொடர்ந்து மேடையில் ஆடுவது என்பது இலகுவான விடயம் ஒன்றல்ல. அதுவும் மேடைக் கூச்சம் சற்றும் இல்லாது இவர் ஆடுவது வியக்கத் தக்கதல்லவா?

இந்தத் திறமை வளர்க்கப் படவேண்டும். முறையான நாட்டியம் பயிற்றுவித்து அதற்கேற்ப இந்த இளஞ் சிறுமியின் ஆற்றல் வளர்ந்தால் இது ஈழத்திற்கு ஒரு பெரும் நாட்டிய மேதையை உருவாக்கும் என்பதில் ஐயம் இல்லை. இந்த நடனத்தைப் பார்த்த நாளாக இவரைப் பற்றி மற்றவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பது பலரது அபிப்பிராயமாக, அவரது தந்தையை தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு பல விபரங்களையும் அறியமுடிந்தது.

**தனபாலசிங்கம் துஸித்தா** ( 16 – 9 – 86) இவரே இந்த அதிசயத்திறமையைத் தன்னுள் வைத்து திருப்பவர். இவர் இலங்கையில் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதோடு இவருக்கு இரண்டு சகோதரிகளும் உண்டு. இவர் 1991ஆம் ஆண்டு நோர்வேக்கு வந்து தற்போது வாட்சோவில் வசித்து வருகின்றார். ஆறுவயதாக இருக்கும் போதே அற்புதமாக ஆடத் தொடங்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. 1992 இல் இவர் ஆடத் தொடங்கி இப்போது மிகவும் அதிசயிக்கத் தக்க அளவிற்கு யாரது துணையும் இன்றித் தனது திறமையை வளர்த்து வைத்துள்ளார்.

இவரது நடனம் **அல்தாவில் பின்மார்க் ஐக்கிய தமிழ் முன்னணியின்** நிகழ்ச்சி ஒன்றிலும் , **துறம்சோ** 2000 ஆண்டு பூர்த்தி விழாவிலும், **வாட்சோவில்** சில கலாச்சார நிகழ்ச்சிகளிலும் , **வார்டோவில்** தொடர்ந்து மூன்று வருடங்களாகவும் ஆடி வந்திருக்கிறார்.

இவரது திறைமை நல்ல முறையில் வளர்க்கப்பட்டு அது எமது நாட்டிற்கும் இனத்திற்கும் பெருமை சேர்த்துத்தர எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இ.தியாகலிங்கம் . வார்டோ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நோர்வே பெண்கலைஞரின் சிறப்புப்பேட்டி!

நோர்வே கலைஞரும்,ஆசிரியருமான திருமதி றொனோக் ஹல்டன் அவர்களை "சர்வதேச தமிழர்"சஞ்சிகைக்காக சிறப்புபேட்டி கண்டேன்.

இவர் மணமானவர்;3பிள்ளைகள்; ஒஸ்லோவுக்கு மேற்கே சுமார் 70 கி.மீ.தூரமுள்ள மியோண்டாலன் எனும் இடத்தில் வசிக்கிறார்.கணவர் சமூகபொருளியலாளராக ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் பயின்றவர்.

இவர் நொஸ்க் மொழியியலில் அதே பல்கலைக் கழகத்தில் பயின்றவர். சமூகவியல்,கிறிஸ்தவம்,கணிதம், கலை,மனோவியல்,முகாமை என பல்துறைகளில் அறிவு வேண்டி, ஆர்வம் காரணமாக ஆசிரியகலாசாலையிலும் பயின்றார்.

பணம் கருதி துறை தெரியும் அறிவு தேடிகளின் மத்தியில் இவர் மாறுபட்டவராக விளங்கினார்.

எனினும் வாழ்வுக்கு உழைப்பு அவசியமாதலால் ஆசிரியர்,ஆலோசகர், வைத்தியசாலை கல்வி அதிபர்,என பல பதவிகள் இலகுவில் கிடைத்தன. தொடர்ந்து தாம் அறிவியல்,கலைத்துறையில் வாழ்நாள் முழுதும் உற்சாகத்துடன் முன்னேறுவதும்,புதிய சவால்களை சிரித்தமுகத்துடன் சந்திப்பதும்,கல்வித்துறை மனிதகுல முன்னேற்றத்துக்கு உதவ உழைப்பதுமே இவரது குறிக்கோள்!என்கிறார்.

**கேள்வி:நோர்வே சமுதாயம் பற்றி....!**

**பதில்:**நோர்வே ஒரு சனநாயகசமுதாயம்!நாம் நம்புவதை; எமது நல்ல இலட்சியங்களை நடைமுறைப்படுத்த விரும்புவர்கள்!. இயற்கையை குழப்பாமல் இயற்கையுடன் ஒன்றித்து வாழ்வதை எமது செல்வமாகக் கருதுபவர்கள்!இங்கு சூழல் அசுத்தமாதல் மிகக்குறைவே!காடுகள்,கனனிகளூடாக பயமின்றி உலவலாம்! கடலிலும்,உள்நீர்நிலைகளிலும்,சகலரும் பயமின்றி குளிக்கவோ,மீன்பிடிக்கவோ முடியும்!

அரசியலில் பிரதான முகாம்களான சிவப்பு(சோசலிசவாதிகள்)நீல(கன்சர்வேடிவ்/வலதுசாரி)முகாம்களிடையே பதவி அதிகாரப்போட்டி காணப்படுகிறது.

**கேள்வி:ஆசிய,ஆபிரிக்க மக்களான குடியேறியோர் பற்றி......!**

**பதில்:**நான் சிறுமியாக இருந்தபோது தந்தையார் காரை இருதடவை சுற்றிவந்து ஒரு நீகிறோவைக் காட்டினார்.முதலில் கறுப்பமனிதரைக் கண்டது நான் அப்போது தான்! மற்ற ஸ்கண்டிநேவியரான டானிஷ், சுவீடிஷ்காரருடன் நாம் பழகுவது கூட! காரணம்: அங்கு அடிக்கடி விடுமுறைக்காக,உணவுப்பொருள் வாங்கச் செல்வதுண்டு.

தென் ஐரோப்பாவிலிருந்து குறைந்தளவு தொழிலாளர் இங்கு வரும்வரை மதிப்பு நன்றாகவே இருந்தது.பின்பு குடியேறியோர் அதிகரிக்க பிரச்சனைகள் கூடின.3ம்சந்ததி அங்கும் சேராது இங்கும் சேராது பிரச்சனைக்குள்ளாகும்.நோர்வேக்கு அந்த பிரச்சனை வர சிறிது காலம் செல்லும். வேலையில்லாத்திண்டாட்டத்தால் பிரச்சனை அதிகரிக்கவே செய்யும். எதிர்கருத்துகள் வளர்கின்றன.வெறுப்பு வளர்கிறது.குடியேறியோர் பொருளியலில் நோர்வேஜியரை விட முன்னேறுவது சிலருக்கு அபாயமாகப் படுகிறது.

ஆனால் அதேசமயம் பலநோர்வேஜியர்,"எல்லோரும் மனிதரே!அமைதி,சுதந்திரம் சகலமக்களுக்கும் உரியது!" என அடிப்படைச்சிந்தனை உடையவர்களாக உள்ளனர்.

சில இளைஞர் குழுக்களில் இனத்துவேசம் பரவுவது ,கவலை,பயம் தருகிறது. தோல்,நிறம்,கலாசாரம் வேறெனினும் சகலரும் சமபெறுமதி மனிதர் என்பதை நாம் விளக்க கடமைப்பட்டுள்ளோம்.பிற கலாசாரத்திலிருந்து நாம் படிக்கவேண்டிய விடயங்கள் உள என என்பதை நாம் மறக்கக்கூடாது.

**கேள்வி:தமிழரை முன்பு சந்தித்தது உண்டா?இலங்கை பற்றி.......!**

**பதில்:**சில வருடங்கள் முன்பு இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் எமது வீட்டிற்கு விருந்தாளியாக வந்திருந்தார்.

மிக சுவாரஸ்யமான,புத்திசாலி யான ஒரு வர்த்தகர் அவர்.சமூக ஈடுபாடுள்ள அவர்,பியானோ வாசிப்பதிலும் திறமைகாட்டினார்.அவர் பெயர் நினைவுக்கு வருவது கடினமாயுள்ளது.சிறு யானை பொம்மைகளைப்பரிசளித்தார்.நாம் அவருடன் நன்கு அளவளாவினோம்.ஒரு மாநாட்டில் பங்கு கொள்ள வந்து என் கணவருக்கு அறிமுகமானார்.

இலங்கைப்பிரச்சனை பற்றி பின் பத்திரிகைகளில் வாசித்து அறிந்தேன். தமிழர் பின்னணி பற்றி அதிகம் முன்பு அறிந்ததில்லை.

**கேள்வி:பல்லினமக்கள் சமுதாயம் அமைதியாக வாழ சாத்தியமுண்டா?**

**பதில்:**பல இன,பல சமய,பல கலாசார சமுதாயத்தை உருவாக்குவது சாத்தியமே! ஐக்கிய அமெரிக்க குடியரசு ஒரு நல்ல உதாரணம்.

"எல்லோரும் எல்லோரையும் மதிக்க வேண்டும்" என்பது அடிப்படைவிதி என நான் எண்ணுகிறேன்.யாரும் உலகில் என் இனம்,என் சமயம்,என் கலாசாரம்,என் பண்பு தான் சிறந்தது என எண்ணக்கூடாது!திணிக்கக்கூடாது!எது நல்லது என அவரவரே முடிவு செய்யும் சுதந்திரம் வேண்டும். நாமும் குடியேறியோர் கலாசாரம், தனித்தன்மை,சமயத்தை மதிக்கும் அதேசமயம் அவர்களும் நோர்வே சட்டதிட்டம்,கலாசாரத்துக்கு மதிப்பளிக்க வேண்டும்!

பெண்கள் சில கலாசாரங்களில் இலகுவான வாழ்வு அமையப்பெற்றவர்கள்.இங்கு நாம் அதிக சிக்கலான கஷ்டவாழ்வு நடாத்துகிறோமோ?என நான் எண்ணுவதுண்டு!

எமது வாழ்கால அனுபவம்,சம்பவங்களின் ஒரு விளைவுப்பொருள்களாகவே நாம் உருவாகியுள்ளோம்.

பொறுமை,புரிந்துணர்வு ஒரு சமுதாயம் அமைதி,நிறைவுடன் இயங்க அவசியம்!

**கேள்வி:ஐரோப்பாவில் எதிர்காலம்..!**

**பதில்:**வளரும் தலைமுறைக்கு ஐரோப்பா நல்ல எதிர்காலம் வழங்கும். கல்வி,உணவு,நீர்,உடைக்கு குறை இருக்காது.வேலையின்மையால் ஒரு பெறுமதியான வாழ்வு பலருக்கு வாழ்நாளிலேயே கிடையாமல் போகலாம். ஆரோக்கியவாழ்வுக்கும் பொழுது பிரயோசனமாகக்கழியவும் இளைய சமுதாயம் ஏதாவது தொழிலை பழக வேண்டும்.

பிற சமுதாயங்களில் அடிப்படைத் தேவைகளை(உணவு,உடை,வீடு,நீர்,குழந்தைகட்கு பாதுகாப்பு)பூர்த்தி செய்வதே பெரும் போராட்டமாக உள்ளது. குறைந்த சம்பளம் அடிப்படைத்தேவையை பூர்த்தி செய்யவே காணாது. உதாரணமாக பாகிஸ்தானில் நாட்கூலி வேலைக்கு போவோர் வேலை நாளாந்தம் கிடைக்குமென உறுதி கொள்ளமுடியாது.

ஆனால் இங்கு தொழிலாளர் பாதுகாப்புச்சட்டம் நியமனம்,வேலைநீக்கம் குறித்து பாதுகாப்பை ஒரு தொழிலாளிக்கு உறுதிப்படுத்துவதால் வாழ்வுக்கு உத்தரவாதம் தரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கேள்வி:மனித வாழ்வில் சமயங்களின் பங்கு பற்றி.....?**

பதில்:சகல சமயத்துக்கும் குறிக்கோள்: அமைதி,மனநிறைவு,நட்பு ஆக இருக்கவேண்டும்.பலசமயங்கள் மற்ற சமயங்களை பொறுக்கமுடியாதவையாக இருக்கின்றன.ஆங்கிலத்தில் "கோட்"அரபில்"அல்லா"எனும் பதங்கள் அடிப்படையில் பொதுவான மூலத்தையே குறிக்கின்றன.சகமனிதர் மீது அன்பு செலுத்துவது;நல்லதைச் செய்வதே மானிடவாழ்வின் முக்கிய உந்துசக்தியாக இருக்கவேண்டும். நன்மை நன்மையையே உண்டாக்கும்.தீமை தீமையையே பிறப்பிக்கும். துன்புறுத்தப்பட்ட குழந்தைகள்,பின்பு தம்பிள்ளைகட்கு துன்பத்தையே வழங்கும்.அமைதியில் வாழ்வது சகலஉலக மக்களுக்கும் நன்மை தரும்.யுத்தம், இனத்துவேசம்,பகைமையில் வளரும் பிள்ளைகள் அதுவே நியதி என எண்ணும்.அமைதி இருப்பதை உணர்ந்து அறிந்தால் தான் பிள்ளைகளும் எதிர்காலத்தில் அமைதியை விரும்பும்.

**கேள்வி:ஐரோப்பாவில் வளரும் புது நாஸிப்படை பற்றி......?**

பதில்:நியோநாஸிசம் பயம்தருகிறது. வெறுமைஉணர்வு,புதிய இலட்சியம், மற்றவர் பற்றி கருதாமை உள்ள இளைஞர் கூட்டம் இதில் ஈடுபடுகிறது.கிழக்குஜேர்மனில் நாஸிகள் பலம் பெற்று வருவதாக ஜேர்மன் நண்பர் ஒருவர் குறிப்பிட்டார்.மேற்கு ஜேர்மனியில் வெளிநாட்டார் வேலை,செல்வம்,செழிப்புடன் வாழ தமக்கு ஒன்றும் இல்லை என கோபம்கொள்கிறார்களாம்.சில இடங்களில் ஸ்கண்டிநேவியரான எமக்கே வரவேற்பு இல்லை. 1940-45ல் எமக்கு நாஸிசம் பற்றி துன்பகரமான அனுபவம் உண்டு.ஒரு அரசியல் குழு(நாசி)சில மனிதக்குழுக்களை முற்றாக அழித்து ஒழிக்க முற்பட்டது விளங்காததாக உள்ளது. தன் 5 சகோதரங்களை நாசி எதிர்ப்பு இயக்கத்தில் இழந்த 74 வயது மூதாட்டியை சந்தித்து கதைத்தபோது பயங்கரமாக இருந்தது.

ஏவா நூர்லாந்த் சமாதான பணியை ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்தபோது நான் சில்க்கில் ஒரு பெரிய சமாதானபுறாவை செய்தேன்.

அது இன்றும் வெஸ்ட்லாந்தின் "அமைதி பண்ணை"யில் உள்ளது. நோர்வே அரசு,மக்கள் உலக சமாதானபணிகட்கு தீவிரமாக உதவுகிறார்கள்.அதற்குரிய மதிப்புமரியாதையை உலகஅரங்கில் நோர்வே பெற்றுளது.

**கேள்வி:இஸ்லாம் பற்றி.............?**

பதில்:இஸ்லாம் இங்கு வளர்வதுபற்றி பலநோர்வேஜியர் பயம் கொள்கின்றனர்.ஏனெனில் இஸ்லாம் மற்ற சமயங்களை ஏற்றுக்கொள்வதில்லை. பெண்களின் நிலையும் இஸ்லாமில் வளர்ச்சியில் பின்தங்கியதாக உளது. சகலமனிதருக்கும் மதிப்பு முக்கியம். ஒருதடவை ஒரு ஜமேக்கா மாணவனை எம்முடன் விடுமுறைக்கு அழைத்தோம்.என் மகன்மார் அவரை மிகநேசித்தார்கள்.ஒவ்வொரு கிறிஸ்மஸ்சுக்கும் அவரது வாழ்த்துமடல் தவறாது வரும்.நாமும் தவறாது எதிர்பார்ப்போம்.இனதுவேசம்,வெறுப்பு நாம் ஒருவரை ஒருவர் சரியாக அறியாததால் தான் வருகிறது.குடியேறியோர் கலாசாரம் எமக்கு மூடப்பட்ட ஒன்றாகவே உள்ளது.நாமும் தொடர்பை ஏற்படுத்த முயல்வதில்லை என்பதும் ஒரு குறைபாடே!

சமுதாயம்பூரணமான மனிதர்களைக் கொண்டதல்ல!அனைவரையும் ஏற்றுக்கொள்ளல் இங்கு அவசியம்.

**கேள்வி:நோர்வே கலை,கலாசாரம் இலக்கியம் பற்றி....?**

பதில்:உலகபிரசித்திபெற்ற இப்சன், பியோண்சன்,முங்க்,விகலாந்த்,காலத்திலிருந்து தற்போது எமது ஆக்கங்கள் மாறுபட்டு நிற்கின்றன.

நவீன கலைகள் தற்போது பிரச்சனைகளை கோடிட்டுகாட்டுவதாயும், பணபலம்;அதிகாரபலம்;அடக்குமுறையாளர்கட்கு புரட்சிதெரிவிப்பதாயும் தான் உருப்பெறுகின்றன.

பலவிதங்களில் இதில் நாம் ஐரோப்பாவையே பின்பற்றுகிறோம். சமுதாய ஈடுபாடுள்ள பலர் கலை, கலாசார,இலக்கிய மாற்றங்களை அவதானிக்கிறார்கள்.

தொலைக்காட்சி கலாசாரம் நமது பாரம்பரிய கலாசாரத்துடன் போட்டி போடுகிறது.வன்முறை கலாசாரம் தொலைக்காட்சி மூலம் வீட்டுக்குள் புகுந்துவிட்டது.கொலை,கொடுமைகள் பிள்ளைகட்கு பழக்கமாகி வருகிறது.இதற்கு பெற்றோர் ஏதாவது உருப்படியாக செய்யவேண்டும். ஒருவருடன் ஒருவர் மனம்விட்டு,உலகம்;நல்லது-கெட்டது;அன்பு பற்றி தெளிவாக உரையாடவேண்டும்.

தன் கருத்தான பேட்டியை முடிக்கும் அவருக்கு "சர்வதேச தமிழர்"சார்பில் நன்றி கூறி விடைறுகிறேன்-பிரபு

**Interview/ A Norwegian Artist**

**போர்லவோக்கில் தமிழர்கள்!**

---

மலைகளும்,கடல்களும் எம்மைச் சுற்றி மகிழ,அதன் நடுவே மக்கள் வாழும் இல்லமாம் போர்லவோக்! ஒஸ்லோவிலிருந்து சுமார் 2500 கி.மீ. வடக்கே தமிழர் வாழும் வார்டோ,வாட்சோ,போட்ஸ்பியூட்,மேகமன் சூழவுள்ள சுமார் 1346 பேர் வாழும் மீன்பிடிக்கிராமத்தில் சுமார் 29 தமிழர்கள் குழந்தைகளுடன் வாழ்கிறார்கள். இங்குள்ள மீன்பதனிடும் தொழிற்சாலையில் தான் பெரும்பாலான தமிழர்கள் வேலைசெய்கிறார்கள்.இங்கு வாழும் சகலமக்களும் இத்தொழிற்சாலையை நம்பியே வாழ்கிறார்கள். இத்தொழிற்சாலைக்கு ரஷ்யகப்பல்கள் தான் அதிகளவு மீன் ஏற்றிவருகிறது.இங்கு பதனிடப்பட்ட மீன்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு பனிகாலத்தில் 24 மணிநேரமும் இருள் சூழ்ந்து விரக்தியை உண்டாக்கும்.கோடைகாலத்தில் 24 மணிநேரமும் கதிரவன் கண்விழித்து இருந்து நித்திரைகொள்ள விடாது குறும்பு செய்வான். யன்னல்களை தடித்த திரைகளால் மூடியே நித்திரை கொள்ளமுடியும். நடுஇரவு சூரியனைக்காண உல்லா சப்பிரயாணிகள் கூட்டம் கூட்டமாக இங்கு படை எடுப்பர்.

அயலூர்களான போட்ஸ்பியூட்டில் 150 தமிழர்கள்:வாட்சோவில் 80தமிழர் வார்டோவில் 200 தமிழர்:என இங்கு வேலை செய்யும் தமிழர் குடும்பங்கள், தனியான இளைஞர்கள் பலர் வாழ்வதும்,இடையிடையே விழாக்கள், விளையாட்டுப்போட்டிகள்,பிறந்தநாள் விழாக்கள் என நாம் சந்தித்து உரையாடி மகிழ்வதும் தவறாது நடக்கும். போர்லவோக்கிலிருந்து 150 கி.மீ.தூரத்தில் பின்லாந்த் எல்லையும்,சுமார் 300 கிமீ.இல் ரஷ்ய எல்லையும் உள்ளன.நோர்வேயில் பனிமழை கூடிய இடங்களில் இதுவும் ஒன்று! இங்கு வாழும் மக்கள் இனதுவேசம் இன்றி தமிழர்களுடன் இறுக்கமாக வாழ்கின்றனர்.இங்கு தமிழ்ச்சங்கமும் இயங்கிவருகிறது.இது எம்மக்களின் பொழுதுபோக்கு,சமூக ஒன்றிணைப்பை வளர்த்து வருகிறது.தமிழரில் அநேகர் இங்கு பிரசாஉரிமை பெற்றுள்ளனர்.அநேகர் இலங்கை சென்றும் திரும்பினர்.2ம் உலகயுத்த பதுங்குகுழிகள்,சின்னங்களை இன்றும் காணலாம்

இரா.விஜய்.................... போர்லவோக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சர்வதேச தமிழர் கவியரங்கம்
## Intl.Tamil Poets' Forum

**உள்ளம் என்பது உயர்ந்த கோபுரம்!**
சின்ன மனிதர்கள்
பெரியபதவியில்
வீற்றிருப்பது
விளைவு அற்றது!
பெரிய மனிதர்கள்
சிறிய பதவியை
ஏற்றிருப்பது
ஏற்றம் மிக்கது!
தன்னை அறிந்தவன்
தாழ்ந்தபோதிலும்
உண்மைநிலையினை
உணர்ந்து கொள்ளுவான்!
பெண்மை மனதினன்
பெருமை பேசினும்
திண்மையின்றியே
திக்குமுக்காடுவான்!
உள்ளமென்பது
உயர்ந்த கோபுரம்!
பண்பு அதனிடம்
படிந்த சித்திரம்!
இன்பு கொள்வதும்
ஈனமடைவதும்
தத்தம் நிலையினில்
தவளும் வேதங்கள்!

**ஆரையம்பதி.க.சபாரத்தினம்,மாஸ்கோ**

---

**வெல்லட்டும் தமிழர் படை!**
ஈழத்தமிழா!உன் வேதனை,
தமிழுக்கு ஏற்பட்ட சோதனை!
விடிந்து முழங்கட்டும் சாதனை!
நீவிர் வடிக்கும் செந்நீர்,
தமிழர்க்கு அதுவே கண்ணீர்!
விரைவில் மாறட்டும் பன்னீராய்!
உம் பாதம் பதித்து காடுகளும்,
போர்க்களமாக மாறியது!
மலரட்டும் பூங்காவனமாக!
வெல்லுக தமிழர் படையாக!
சிதறட்டும் விளையும் தடையெல்லாம்!
**கோட்டகுப்பம் முகமது கவுஸ்-குவைத்**

---

**புலம் பெயர்ந்த இதயங்கள்!**
தமிழீழ வானத்து வெண்ணிலவே!-
உன்போல்
அமிழ்தான வெண்ணொளியை காண
-வில்லை இங்கு
உயர்வான நம்தமிழர் வீரங்களைக்
கேட்டு
சுவையான சேதியொன்று நம்காதில்
சொல்லு!
இருதோணியில் பாதம்பதித்திட்ட
வேதனை ஜீவன்கள் நாம்!
விழிக்கூட்டினில் சூடேறிக் கண்ணீரில்
கரைபுரள்வதும் ஏன்?
வெளிவாழ்க்கையைத்தேடி பொய்முகங்க
ளானதும் உண்மைதான்!
மொழிமௌனத்தில் வாழ்ந்து காலத்தின்
பாதை தெரியா துதவிப்பவர் நாம்!

வானம் அறுந்தொரு பூமியில் வீழ்ந்தி
-டலாம்
நம்நாடு மறந்தொருவாழ்வு நமக்கில்லை
சுழல்பூமி கழண்டொரு மூலையில்
சாய்ந்திடலாம்!
எம்தேசம் என்றொரு தாரகமே
மூச்சாகும்!

தாளமிழந்து கவிதைகள் மலர்ந்திட்
-டாலும்
மலர்மாலைகள் மறந்து மணம்தர
மறுத்தாலும்
நீலஓடை உறைந்தொரு புழுதியாய்
ஆயிட்டாலும்
மலர்ப்பாடையிலும் மனம்தேடிடும்
ஈழதேசம்!

**வ.வதனகோபாலன்-ஒஸ்லோ,நோர்வே**

---

**சமாதானச்சத்துருக்கள்!**
கருமேகம் முகில் தலை விரிக்க
போர்மழை பெய்வதற்காய்
பேய்கள் தயாராகும்!
தமிழ்மயில்கள் தமை மறந்து
சமாதானமெனச்சல்லாபிக்கும்!
சிறகறுத்துச்சிறைபிடிக்க
பின்புறமாய் பறையறையும்
கொடியரசு!

நய வஞ்சகமாய்,
மின்னலெனக்கண்ணடிக்கும்
அவமானமாகும் சமாதானம்

தமிழனால் தொல்லை
அவனைத்திருப்பி அனுப்பு!
ஆயுதங்களையும் அங்குவிற்று
தன் பணப்பையை நிரப்பநினைக்கும்
பணக்கார சமாதான சத்துருக்கள்!
ஒரு கல்லில் இருமாங்காய்!

பெருமழை ஐயோ...!
அது அமிலமழை
புற்றீசல்களாய் எம்மினம்
ஐரோப்பிய வீதிதோறும்
கொடிபிடிக்கும்!
அரசநிறவாதப்பேய் கலைக்க
தீப்பந்தங்களுடன் படை எடுக்கும்!

எம்மழை வந்திடினும்
நனைவதும் நடுங்குவதும்
நம்மவர் தமிழ்மக்களே!
போர்முடிந்து போனால்
காசுடன் இங்கிருந்து
ஒரு கூட்டம்!
துவக்குடன் அங்கே
மறுகூட்டம்!
விலைபோகப்போவதும்
தலைபோகப்போவதும்
அங்குள்ள அப்பாவித்
தமிழ்கூட்டமே!
**நக்கீரனார் - நோர்வே**

---

**சிவப்பு விளக்கு !**
சிவப்பு விளக்கு எரிகிறது!
ஞாபகப்படுத்தினால்
நினைவு வராமல் போகாது!
நினைவு வந்துவிட்டால்
நிச்சயமாய் சொல்லிடலாம்!
யார் யார் என்று?
இன்னும் சொல்வதானால்
இதயம் படபடக்கிறது!
வேறு யாருமல்ல!
விதியும் இரவும் தான்!!
**எம்.ஐ.ரபீக் - பாஹ்ரயின்**

---

**மகிழ்ச்சி!**
புகைவண்டியால்
பேருந்து நின்றது!
பயணி வருந்தினான்
வெள்ளரி சிறுவன்
மகிழ்ந்தான்!!
**ஒரே வரிசையில்!**
அப்பாவும் மகனும்
ஒரேவரிசையில்
வேலைவாய்ப்பு அலுவலகத்தில்
அட்டை புதுப்பிக்க!
**சாயம்**
கன்னியரே
உதட்டுக்கு பூசுங்கள் தவறில்லை
உள்ளத்துக்கு பூசாதீர்கள்
சாயத்தை!
**குடிகாரன்**
மிதப்பதாக நினைத்து
மூழ்குபவன்!
வாழ்வை அனுபவிப்பதாக
நினைத்து இழப்பவன்!
**காதல்**
முத்துக்குளிப்பது போன்றது!
எடுக்கும்வரை கடினம்,
எடுத்தபின்பு இன்பம்!
**இரா.இரவி. - மதுரை**

---

**உலகை அழைக்கும்**
**சமாதானப்பூக்கள்!**
உலகே! அந்த சன்னலின் வழியே
சமாதானப்பூக்கள்!
கண்டதும் காதல்!
கன்னியுடன் கொள்ளும்
காளை மனம் போல்!
உலகே அறியாயோ!
மணமும்,கொள்ளை அழகுடனே
உயிர்காக்கும் மூலிகை அதுவன்றோ!
எங்கெங்கும் ஆதிக்கமுதலைகள்,
தம் கோரப்பற்களால் உலகைக்கிழிக்க
பணமோ,நிலமோ,இனமோ,மொழியோ
எதுவோ காரணமாகும்
உன் ரணத்துக்கு!
மானிடர் மனிதநேயம்,நீதி மறந்ததால்
உன் கண்களில் இரத்தம்!
புண்ணுக்கு மருந்திடுமனிதா!
அன்பினை செபம் செய்!
துன்பம் விலகிடும்!
இனம்,மொழி,மதம்,நிலம் என
வன்முறை தூண்டிய,
தன்னிலை இழந்தோரை
தலையில் தூக்கிக்கொண்டாடி
உன் தலையிலே மண்போட்டாயோ?
மீதியாய் இருக்கும் நாட்கள்
சொர்க்கமாய் இருக்கட்டும்!
நல்லோர் புரியும் நற்காரியங்கட்கு
உதவிடல் வேண்டும்!
நமது அன்பை பிறரிடம் காட்டல்!
அவரவர் தேவையை
நிறைவுறவைத்து.
அடுத்தவர் தேவையில்
ஆக்கிரம்வேண்டாம்!
உலகே சன்னலில் சமாதானபூக்கள்!
**பி.மனோரமா - மதுரை -12**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இலங்கைக்கடிதம்................!

**அன்பு நண்பா,**

ஈழத்தமிழர்களின் உரிமைப்போராட்டத்தைப் பொறுத்தவரை "2வது ஈழயுத்தம்" ஒரு முக்கிய திருப்பு முனைக்கு காரணமாக அமைகிறது.1990 யூனில் ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்தம்,கடந்த ஜனவரி 8ம்திகதிக்கு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட தாக்குதல் நிறுத்த உடன்படிக்கை மூலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

2வது ஈழயுத்தத்தின் முடிவு "இலங்கை" என்ற இந்த தீவில் இரண்டு அரசுகள் உள்ளதைத்தெளிவான முறையில் காட்டி நிற்கின்றது.இரு அரசுகளின் தலைவர்கட்கிடையே இடம்பெறும் ஒரு உடன்படிக்கையை போலவே திருமதி.சந்திரிகாவும் திரு.பிரபாகரனும் கையொப்பமிட்டுள்ள உடன்படிக்கை காணப்படுகின்றது.

சமஅந்தஸ்திலுள்ள இருதலைவர்கள் கையொப்பமிடுவதைப்போலவே இந்த உடன்படிக்கை அமைந்துள்ளது என்பது முதலாவது விடயம்.இந்தக்குட்டித்தீவில் இரண்டு இராணுவங்கள் உள்ளன என்பதை இந்த உடன்படிக்கை ஏற்றுள்ளது; அங்கீகரித்துள்ளது என்பது 2வது விடயம்

இதனைவிட மற்றொரு விடயத்தையும் சுட்டிக்காட்டவே இதனை எழுதுகின்றேன்.

1990யூனில் 2வது ஈழயுத்தத்தை ஆரம்பித்தபோது,ஜனாதிபதி பிரேமதாசா போராட்டத்தை ஒழிப்பதற்காக பலவேறு திட்டங்களையிட்டும் சிந்தித்தார். இராணுவ,அரசியல் முனைகளில் மட்டுமன்றி,பொருளாதார முனையிலும் போராட்டத்தை ஒடுக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் தீர்மானித்தார். இதற்காக வடபகுதிமீது பெரியளவிலான தடை ஒன்றை அவர் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

1987ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொண்டு வந்ததை விட மிகவும் மோசமானதாக இது காணப்பட்டது.அத்தியாவசியப்பொருட்கள் உட்பட 50க்கு மேற்பட்ட பொருட்கள் இவ்வாறு தடை செய்யப்பட்டன.இராணுவநோக்கங்கட்காக இவை பயன்படுத்தப்படுவதாகக் கூறப்பட்ட போதிலும் கூட,இவற்றில் பெரும்பாலானவை அன்றாடப்பாவனைப்பொருட்களே! என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப்பகுதிகளில்,குறிப்பாக வடபகுதியில் இந்தத்தடைகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின.எரிபொருள் தடை காரணமாக அடுப்படிகள்,தோட்டங்களில் பூனைகள் படுத்துறங்கின.போக்குவரத்துகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.மின்சாரம் துண்டிக்கப்பட்டது.வடபகுதி இருண்டதைப்போலவே தமிழ்மக்களின் எதிர்காலமும் இருண்டுவிடும் என பலர்அஞ்சினர்

இவ்வளவுக்கும் மத்தியில் மூர்க்கத்தனமான மும்முனைத்தாக்குதல் தமிழர் உயிருடன் விளையாடியது.

பட்டினிச்சாவும் ,போசாக்கின்மையும் தாண்டவமாடும் நிலையில் தமது தீர்வை திணிப்பது இலகுவானதாக இருக்குமென அரசு கனவு கண்டது.

ஆனால் நிலைமை தலைகீழாக மாறியது.சுதேசியப்பொருளாதாரம் ஒன்றைக்கட்டி எழுப்பவேண்டுமென்ற தேவையை இது தமிழ்மக்களுக்கு தெளிவாக உணர்த்தியது.இதன் அடிப்படையில் உருவான தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்துள்ள பணிகள் அரசின் நோக்கங்களைச்சிதறடித்துள்ளது.

வடபகுதிநிலை முற்றாக மறைக்கப்பட்டு வெளிநாட்டு உதவிகள் மறுக்கப்பட்ட ஒருநிலையிலேயே வடபகுதியின் சுதேசியப்பொருண்மியம் வளர்ச்சியடைந்தது. சோமாலியா அல்லது எதியோப்பியாவிலுள்ளது போன்ற ஒருநிலைமை வடபகுதியிலும் ஏற்படலாம் என உலகமே எதிர்பார்த்தது. ஆனால் இந்த 5 வருட கால யுத்தத்துடன் கூடிய பொருளாதாரத்தடை காரணமாக பட்டினிச்சாவு என ஒரு சம்பவம் கூட இடம்பெறாதது,சர்வதேச அரங்கில் ஒரு ஆச்சரியத்தையே ஏற்படுத்தி இருக்கிறது.

சுதேசியப்பொருளாதாரம் திட்டமிட்ட முறையில் வளர்க்கப்பட்டமையே இதற்கு காரணமாகும்.இராணுவக்கட்டுப்பாட்டு இறுதி எல்லையான தாண்டிக்குளத்தை தாண்டி வடபகுதிக்குள் முதலாவது காலடியை எடுத்துவைக்கும் போதே, சுயபொருளாதாரத்தை கட்டி எழுப்புவதில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்துள்ள பணிகளை நேரில் காணக் கூடியதாக உள்ளது.

காடுவளர்ப்பிலிருந்து மக்களுடைய அத்தியாவசிய தேவைகளைப் பெற்றுக் கொடுப்பது ஈறாக கைத்தொழில் அபிவிருத்தி வரையில் மக்களுக்கு நெருங்கிய துணையாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

சுதேசியப்பொருளாதாரம் ஒன்றைக்கட்டி எழுப்புவதில் நீண்டகால,குறுகியகால திட்டங்கள் பலவற்றை இந்நிறுவனம் செயற்படுத்துவதைக்காணக்கூடியதாக இருந்தது.விரிவான ஆய்வுகள் மூலம் இவற்றுக்கான திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

எரிபொருள்தடை,போக்குவரத்து,கைத்தொழில் முயற்சிகளை மட்டுமன்றி விவசாயத்தையும் மிகவும் மோசமாகப்பாதித்தது.தண்ணீர் இறைக்கும் யந்திரங்கள் ஸ்தம்பிதமடைந்தன.பச்சைப்பசேல் எனக் காட்சியளித்த தோட்டக்காணிகள் எல்லாம் பாலைவனங்களாக மாறிக்கொண்டிருந்தன.காய்கறிகளின் விலை சாதாரண மக்களுக்கு எட்டாதளவு உயர்ந்தன. இந்நிலையில் இந்த நிறுவனம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.

சிரட்டைக்கரி மூலமும்,காற்றாடி மூலமும் நீர் இறைக்கும் இயந்திரங்களை அறிமுகம் செய்தது. குறுகியகாலத்தில் பயன்தரு பயிர்களையும்,புதியபயிர் வகைகளையும் அறிமுகம் செய்தபோது,குறுகியகாலத்தில் இவ்வளவு பலன் கிடைக்கும் என எவரும் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் இன்று இலங்கையிலேயே காய்கறிவகைகள் எங்கு மலிவென்றால் அது வடபகுதியில் தான்.

விவசாயத்துறை மட்டுமன்றி பல்வேறு கைத்தொழில்களும் உள்ளூர் மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடையத்தொடங்கியுள்ளன. பயிர்ச்செய்கைக்கு அவசியமான உரம், கிருமிநாசினி போன்றவையும் தடை செய்யப்பட்டுள்ளமையால் அவையும் உள்ளூரிலேயேகண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் குறிப்பிடத்தக்களவு வெற்றி கிடைத்தமை,விவசாயத்தில் முழுமையான தன்னிறைவுக்கு வழிகோலின.

இதற்கு அடுத்ததாக சிறுகைத்தொழில் மற்றும் குடிசைக்கைத்தொழில் முயற்சிகளில் இந்நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது.சீமெந்து உற்பத்தி,சிக்கன அடுப்புகளின் தயாரிப்பு போன்றன இங்கு குறிப்பிடத்தக்கன.காலத்தின் தேவைக்கேற்ப வரையறுக்கப்பட்ட வளங்களையும் ,வசதிகளையும் மூலதனமாகக்கொண்டு இந்த சுயதேவைப்பொருளாதாரம் இன்று நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.

**விதுரன்-கொழும்பு**

## தமிழ்நாட்டுக்கடிதம்.....................!

**அன்பு நண்பா,**

தமிழ்நாட்டு அரசியல் பற்றி நீர் அறிந்திருப்பதால் நான் இங்கு லயன்கழக மக்கள் சேவை பற்றியே கூறவிரும்புகிறேன்.

"உயிர் உள்ளவரை இரத்தம்கொடு,
உயிர்போனபின் கண்கள் கொடு"

இது அரிமா நங்கை திருமதி.ஸ்ரீலதா அவர்களின் புதியகோசம்!

இரத்ததானம் செய்வதால் லட்சக்கணக்கானோர் உயிர்பிழைத்துள்ளனர்.கண்தானம் செய்வதால் ஆயிரக்கணக்கானோர் கண்ணொளி பெற்றுள்ளனர். ஆனால் 4மாதம் வாழ்ந்த சிறுகுழந்தை கண்தானம் செய்த அதிசயத்தைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

சென்னை அரிமா தம்பதியினர் ரவிச்சந்திரன்-வித்யாவின் குழந்தை சாருமதி 4ம்மாதம் அகாலமரணமடைந்தார். எழும்பூர் அரிமா சங்க மூலம் இறந்தகுழந்தையின் கண்கள் "ஏ"கிரேட் கண்களாக தானமாகப்பெறப்பட்டன.

இத்தகைய மனஉறுதி கொண்ட அரிமா தம்பதியினரை போயஸ்கார்டன்ஸ் லயன் கழகம் 4-2-95 அன்று பாராட்டி கௌரவித்தது.அவர்களை நாமும் பாராட்டுவோம். போயஸ் கார்டன்ஸ் அரிமா சங்கத் தலைவர் வி.பி.கோபாலராகவன்;அவர் துணைவியார் ஸ்ரீலதா அடையாறு ஜெம்ஸ் அரிமாசங்கத் தலைவர் பொதுநலசேவையே அவர்கள் உயிர்மூச்சு!இரத்ததான முகாம்கள்,கண்தான முகாம்கள் எண்ணற்றளவில் நடாத்தி உள்ளனர்.

இனம்,மதம்,மொழி வேறுபாடின்றி சகோதரத்துவ உணர்வுடன் தோழமை,தொண்டு இவற்றுக்காகப்பாடுபட்டு வரும் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். 5-2-95ல் தமிழ்நாடு ஹாஸ்பிடலுடன் இணைந்து நடாத்திய இரத்ததான முகாமில் அரிய ரத்தவகைகள் தானமாக தரப்பட்டன."கேட்டரக்" சத்திரசிகிச்சையை இலவசமாக செய்வது தனிச்சிறப்பு!

சர்வதேச தமிழர்"வாசகர்கள் இரத்ததானம்,கண்தானம் பற்றிய விபரங்கட்கு:**Lion V.P.Gopalaragavan,16,92nd st, 18th ave,Asoknagar,Madras**

**அன்புடன்,........பி.சத்தியநாராயணன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனிப்பூக்கள். காரையூரான்

அனு உடனடியாக பொய்களை அவிட்டு விட்டு இந்த நிலைமையைச் சமாளித்துக் கொள்ளலாம் என எண்ணியவண்ணம், பொய்களை அவிட்டு விட்டாள். ஆனால் அதற்கு எந்தப் பயனும் இல்லை என்பது சிலநிமிடங்களில் புரியத் தொடங்கியது.
அதா......ச்.எனக்கு எக்ஸ்றா கிளாஸ் இருந்திச்சு, அதுதான் லேட்டாயிட்டுது.
நீ நல்லா பொய் சொல்லப் பழகீட்டா. உன்ர எக்ஸ்றாகிளாஸ் லட்சணத்த நான் பார்த்தேனே. உனக்கு, எங்க ஸ்கூல்ல எக்ஸ்றா கிளாசா? ம்....கும்..... அந்த நில பிளாட்டில எல்லோ எக்ஸ்றா கிளாஸ்?
அனுவுக்குத் துக்கிவாரிப் போட்டது மட்டுமல்லாமல், நடுக்கமும் பிடித்துக் கொண்டதால் சிறிது நேரம் நாஎழாது, திண்டாடிப், பின்பு ஒருவாறு எச்சிலைக் கூட்டிவிழுங்கியவண்ணம், அக்கா......................?
எல்லாம் எனக்கு தெரியும்மடி. நான் நீங்கள் ரெண்டுபேரும் என்ணாதிரி........ச்...............இதெல்லாம் வீட்டுக்குத் தெரிஞ்சா? ஒண்டு செய்யேக்க, எங்களுக்கு கொஞ்சமாவது பொருந்தக்கூடியதா செய்யிறதுதானே? எங்கட சொந்த சாதியிலேயே எத்தினையோ பிளவு. காதல் கீதல் எண்டா, பொல்லோடும் தடியோடும் நிப்பினம். அது உனக்கு நான் சொல்லத் தேவையும் இல்ல. ஊரில அப்பா என்ணாதிரி நடந்தார் எண்டதும் உனக்கு தெரியும். ச்............. இதுகள் எல்லாம் தெரிஞ்சுகொண்டு எப்பிடி துணிஞ்சு இதையெல்லாம் செய்யிறா?இஞ்ச இருக்கிற மற்றச் சனங்களுக்கு தெரிஞ்சா எவ்வளவு அவமானம் எண்டு தெரியுமோ உனக்கு? ஊருக்கு தெரிஞ்சா பரம்பரையவே அவமானமா இழுத்து பேசுவினம். அதவிட இஞ்ச அப்பா அறிஞ்சா என்ன நடக்குமெண்டு எனக்கே தெரியாது. ................ அனு?
ம்....?
நான் சொல்லுறபடி செய்வியா?
என்ன செய்யோணும்?
இனி அவனோட பழகிறத விட்டிட்டு. அவன இனிக் கண்டா கதைக்காத ! மற்றப்பக்கம் பார்த்துக் கொண்டு வா. பிறிரைமில தனிய இருக்காம யாராவது கேள்சோட சேர்ந்து இரு என்ன?
அக்கா!?
என்னடி அக்கா? உனக்கு தப்பிக்கிறத்துக்குத்தான் வழி சொல்லுறன். விரும்பினா நான் சொல்லுறபடி செய்து தப்பிச்சுக்க. அப்பிடி உனக்கு விருப்பமில்லைஎண்டா வீட்ட போனோன்ன நான் விசயத்த உடைச்சிறன்!

அனுவால் சியாமிழியை எதிர்த்துப் பேசமுடியவில்லை. அப்படி எதிர்த்துப் பேசினால் வீட்டில் இன்றே ஒரு பெரும் பூகம்பம் வெடிக்கும் என்பதையும், அதை அனு இன்றே விரும்பாததாலும் எதுவும் பேசாது சியாமிழியின் பின்னால் நடந்து சென்றாள். சியாமிழியும் எதுவும் பேசாது செல்லவே, அனு தானாக சமாதானத்திற்கு முன்வந்தாள்.
செரி நான் என்ன செய்யோணும்? வெறுப்போடு கேட்டாள்.
முதல்காரியமா அவன இண்டையோட மறந்திடு!
இதைஅனுவின் மனது ஒப்பாவிட்டாலும் அமைதியை வலுவுக்கு சிறை செய்து கொண்டிருந்தாள்.
என்ன பேசாமல் வாறா? அதோட இன்னொரு முக்கியமான விசயம் என்னனண்டா நான் உன்ன பள்ளிக்கூடத்தில இருந்துதான் கூட்டிக் கொண்டு வாறன் எண்டாத்தான் ஒரு றகளையும் நடக்காது. நான் அப்பிடிச் சொல்லுறன். அதுக்கேத்தாப்போல நடந்துக்க.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனிப்பூக்கள்.

காரையூரான்

அனு தொடர்ந்தும் அமைதியுடன் அடம்பிடித்து உறவுகொண்டிருந்தாலும், மனம்மட்டும் அக்காவின் கருத்திற்கு எதிராய்ப் போராடிக் கொண்டிருந்ததோடு, தனக்கும் ஸ்தீக்கிற்கும் உள்ள காதல் அழிக்க முடியாதது , நியாயமானது , என முடிவு செய்து கொண்டது. ஆனாலும் அக்காவின் சொற்களை ஒப்பிற்கு கேட்டு , அதை அப்பா அம்மாவின்முன் நடிப்பதில் இருந்துமாத்திரம் அவள் விலகிவிடவில்லை. இவர்கள் நடிப்பை அன்று எவராலும் இனங்கண்டு கொள்ள முடியவில்லை என்பது சர்வஉண்மையே.

வெளியே காற்று வீசிக் கொண்டிருந்தது. சியாமிழி சாளரத்தினூடே வெளியுலகை நோக்கினாள். அவள் மனதில் , இந்தக்காற்று இப்படியே சாதரணமாக அடங்கிவிடுமா? அல்லது புயலாக மாறுமா ? என்கின்ற கேள்விகள் பயங்காட்டத் தொடங்கியது.

காலை ஆறரைமணிபோல் வெளியே வந்த வேந்தனால் காற்றின் வேகத்தைத் தாக்குப்பிடிக்க இயலாது , கதவுகளையும் சுவரையும் துணைக்குத் தேடி , ஒருவாறு காரைஅடைந்தார். காருக்குள் ஏறி அதை இயக்கியபின்பு , மிகவும் வெறுப்போடும் , சலிப்போடும் , வெளியே அவதானமாக வந்து , காரின்மேல் படிந்திருந்த பனித்துகள்களை அகற்றவும் , அன்னம் கௌ.. ரியையும் அனுவையும் வாடகைவண்டியில் பாடசாலைக்கு போகுமாறு கட்டளையிட்டுவிட்டு வந்து காருக்குள் தன்னை அடைத்துக் கொள்ள , வேந்தனும் அதற்குள் அடைக்கலமானான். காருக்குள் தற்போது வெப்பம் பரவி இதமாய் இருந்தது. இந்த இதம் அன்னத்தை ஒருமுறை இன்பப்பார்வை பார்க்கத் துண்டியது. வீதிகளில் பனியில்லாது பனிவெட்டும் இயந்திரத் தால் அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. ஆனாலும் சிலவேளைகளில் காற்றுச் சுழன்று அடிக்கும் போது , ஒன்றுமேதெரியாது அதேஇடத்தில் வாகனத்தை நிறுத்த வேண்டியதாயிற்று. ஒருவாறு நிற்பதும், உருட்டுவதுமாய் , தமது தொழிற்சாலைகளைச் சென்றடைந்தனர்.

சியாமிழி இந்தவருடம் பாடசாலைக்கு விடுப்பெடுத்திருந்தது அன்னத்திற்கு மிகவும் வசதியாகப் போய் விட்டது. சமையல் வேலைகள் , வீட்டு வேலைகளைஎல்லாம் அவள் தலையில் கட்டிவிட்டு, தான் தப்பித்துக் கொண்டாள். சியாமிழிக்கு இதில் இருந்து தப்பித்துக் கொள்ள விருப்பமாயினும் தற்போது வேலைஎடுப்பது சிரமமானதால் வேண்டா வெறுப்போடு வீட்டில் இருக்கலானாள்.

கோபாலின் மூளை இரவுமுழுவதும் நன்மை தீமைகளை அலசிக் , கடைசி முடிவாக, அதை வேந்தனிடம் கூறுவதாய் உறுதிசெய்து கொண்டது. இந்தமுடிவுக்கு அவனால் இரவு மூன்றுமணியளவிலேயே வர முடிந்ததுடன் , இந்தப்பிரச்சனையை முளையிலேயே கிள்ளிவிடவேண்டும் என்கின்ற வெறியும் அவன் மனதில் மூட்டம் கொண்டது. வேலைத்தளத்தில் இதைப்பற்றிக் கதைத்து அது பரகசியமாவதை அவன் விரும்பாததால் வேலை முடிந்ததும் வேந்தன் காரை இயக்க, கோபால் கதவைத்தட்டி, அனுமதிபெற்று முன்னிருக்கையில் அமர்ந்து கொண்டான். அவன்மனது அதைக் கூறுவதற்கு இதுதான் நல்ல சந்தர்ப்பம் என எண்ணிக் கொண்டது.

எங்க ரவுணுக்கா?
இல்ல நான் வீட்டுக்குத்தான் போகோணும். அதுக்குமுதல் உங்களோட ஒருவிசயம் கதைக்கோணும்.
என்ன? (.... வளரும்)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ISSN:0805-7443 SARVADESA TAMILER Vol.2;Nr.4;April 1995

BLAD

Return Address:
Editor/Publisher:
N.S.Pirabu,B.Sc.,Dip.Journalism(U.K.)
Address:I.Hervigs v.69A,3035
Drammen,Norway.Tel/Fax:32.813416;
E.mail/Internet:nsp@oslonett.no

Subscription/yr:Scandinavia:180,N.Kr.;
Sri Lanka/India:12USD;U.K.12£;France:60fr.
Germany:24DM;Canada:18CD;Swiss:24fr;
Australia:24AD SaudiArabia:36SR;
Singapore/Malaysia:24SD;others:20USD
Postgiro:08230899453;BankA/C:60661012199

Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet

## சிறுகதை: விழிப்புணர்வு............!

### மீனா அண்ணா-புதுச்சேரி

பணி இல்லாத இளைஞர்க்கெல்லாம்
நூலகமே அடைக்கலம்!அறிவழகனு
ம் அதற்கு விதிவிலக்கல்ல. நூலகத்
துள் நுழைந்ததும் நூலகரின் குரல்
கடுமையாக வரவேற்றது.
"நேத்து தான் வந்த சஞ்சிகையை
யாரோ திருட்டுப்பயலுங்க தூக்கிட்
டுபோயிட்டாங்க;அறிவுத்திருடங்க! "
அதைக்கேட்டு மனம் வருந்தியபடியே
பத்திரிகைகளை புரட்டினான் அவன்.
எதை எதைத்திருடுவது என்ற விவஸ்
தையே இல்லாமல் போய்விட்டதே!
ஆங்கிலத்தில் அழைப்பிதழ் தந்தவர்
களிடம் அதைத்தமிழில் அச்சடித்து
வருமாறு கூறியஅமைச்சர் ஒருவரை
பாராட்டிய செய்தியை படித்து ரசித்
தான்.
பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்து
மறியல் போராட்டம் நடத்தப்போவதா
க ஒரு அமைப்பு அறிவித்தது,அவன்
கவனத்தைக்கவர்ந்தது.ஏதாவது பங்க
ளிப்பு செய்யவேண்டும் என எண்ணி
யவன் வீடு வந்து உணவருந்தியதும்,
மிதிவண்டியை அந்த அமைப்பின்
முகவரியை நோக்கி மிதித்தான்.
தலைவர்அன்பரசன் தான் வரவேற்றா
ர்,"வாங்க,வணக்கம்,உட்காருங்க!"
"ஐயா,போராட்டத்தில் கலந்துகொள்
ள முடிவுசெய்து நானும் வந்திருக்கி
றேன்."
"நல்லது!நீங்க யாரு? உங்க விபரத்
தைக்கூறுங்க!"என அவர் பன்மையி
ல் விளித்தது,வயதில் சிறியவனான
அவனுக்கு என்னவோ போல் இருந்
தது.தன்னைப்பற்றி எடுத்துக்கூறி
னான்.போராட்டத்தின் கோரிக்கை
கள் அடங்கிய துண்டுப்பிரசுரத்தைப்
பெற்றுப்படித்தான்.அமைப்பின் இதழ்
ஒன்றையும் காசு கொடுத்துப்பெற்று
க்கொண்டான்.
வீடு திரும்பியபோது குண்டும்,குழியு
மான சாலை மனதில் விரக்தியை
உண்டு பண்ணியது.அதோ அந்த
சந்துக்கு அப்பால் ஒரு காலிமனை
யில் சாராயக்கடை விரைவில் வரஇரு
க்கும் செய்தி எரிச்சலூட்டியது.
பக்கத்திலே அந்தோனியார் கோவில்,
பள்ளிக்கூடத்துடன் எப்படித்தான்
அனுமதி கொடுத்தார்களோ?என
மனம் சலிப்படைந்தது.எவ்வளவு லஞ்ச
ம் பெற்றார்களோ?எந்த அமைச்சரின்
எடுபிடியோ!அவன் மனம் குழம்பியது.
அண்ணா திரையரங்கைத்தாண்டிய
தும்,வந்த சந்தியில் போக்குவரத்துக்
காவலர் நிறுத்துமாறு சைகை காட்
டியதும்,நிறுத்தி திரும்பியபோது இட
துபுறம் ஒரு இளம்பெண் தன் வண்டி
யையும் நிறுத்தினாள்.
"அட,எவ்வளவு காலம்தான் சைக்கி
ளில் லொடக்!லொடக்! என்று வேலை
தேடித்திரிவது?சத்தம் காட்டாமல் இப்
படி ஒரு அழகான பெண்ணை, அது
வும் "அலெயன்சு பிரான்சே"வில் பிரெ
ஞ்சு படித்து,"ஒப்சியம்"(பிரசாஉரிமை)
பெற்ற பெண்ணாகப்பார்த்து,மணம்
செய்து பிரான்சுக்கு ஓடிவிட்டால்
என்ன!என அவன்மனம் சபலமுற்றது.
சபலங்கள் எல்லாம் நிறைவேறுமா?
வீடு வந்து துயின்று,மறுநாள் போரா
ட்டத்துக்கு தயாரானான்.
வீட்டில் எல்லோருமே ஒரு மணவீட்டி
ற்கு தயாராகினார்கள்.
"காலம் காலமாக ஐயர் சொல்லும்
மந்திரத்தின் அர்த்தம்புரியாமல்,நம்ம
ஆளுங்கதாலி கட்டிறாங்க!ஏனுங்க,
என்னங்க ஐயரு சொல்றாரு? என்று
கேட்டால்,"புரியலை!பழகிப்போச்சு!கா
லம் காலமாய் செய்வதை எப்படிங்க
மாற்றுவது?"என்கிறாங்க.
எல்லாத்தையும் கேட்க அவனுக்கு
ஒரே குழப்பமாய் இருந்தது.நம்ம
அரசியல்,நம்ம சமயம்,நம்ம சமூகம்
பண்பு,பகுத்தறிவின் அடிப்படையிலா
உண்மையில இயங்குது? என்ற கேள்
விக்கு விடை கிடைப்பது கடினமோ?
"அண்ணா!எங்கே பயணம்?"என்று
கேட்ட தம்பிக்கும்,"புறப்படும்போது
அப்படிக்கேட்கக்கூடாதடா!தம்பி"
என ஒரு வழமையான நம்ம சமுதாய
பதிலை எடுத்து வீசி விட்டு,கொடுப்பு
க்குள் ஒரு நமுட்டுச்சிரிப்புடன் வெளி
யேறினான் அறிவழகன்.
மிதிவண்டியில் செல்வது ஆபத்தான
து என மனம் எச்சரிக்க பேருந்தை
நாடினான்.போராட்டக்களத்தை
அடைந்ததும் அடையாளஅட்டை
யை கணேசன் எனும் தீவிர தொண்
டர் வழங்கினார்.மிகவும் உற்சாகமாயு
ம்,பரபரப்பாயும் அவர் இயங்கினார்.
பதாகைகளைத் தாங்கியபடி ஊர்வல
ம் புறப்பட்டது. முன்னே ஒலிபெருக்கி
வண்டி முழக்கம் எழுப்பிச்சென்றது.
ஒரு எதிர்க்கட்சி அரசியல்வாதியும்
கலந்துகொண்டார்.
ஊர்வலம் காவல்நிலையத்தைத்
தாண்டியதும்,சில காவலர்கள்
கைத்தடியுடன் இணைந்து கொண்ட
னர்.எதிர்க்கட்சி பங்கு கொண்டது
ஆளும்கட்சிக்கு பிடிக்கவில்லையோ?
காவல் நிலையத்தில் பெண்களுக்கு
எதிராக நடந்த பாலியல் வன்முறை
பற்றிய பதாகைகள்,சுலோகங்கள்
காவலர்கட்கு எரிச்சலூட்டுகிறதோ?
தலைமைச்செயலகத்தை ஊர்வலம்
அடைந்தபோது,தலைமைக்காவலர்
முன்னே வந்தார்.
அமைதியாகக் கலைந்துசெல்லுமா
றும்,கூட்ட அனுமதி ரத்தாகியதாக
வும் கூறி மிரட்டத்தொடங்கினார்.
ஊர்வலம் அப்படியே வாயிலை அடை
த்து அமர்ந்து கொண்டது.
தலைவரை வலுக்கட்டாயமாக நெட்
டித்தள்ளினார் ஒரு காவலர்.களேபரம்
கூடியது.முழக்கமும் கூடியது.
பொறுமை இழந்த தலைமையர்
அனைவரையும் கைதுசெய்தார்.
என்ன ஜனநாயகமோ!நம்மநாட்டில்
என அவன் மனம் சலித்தது.
எல்லோரும் வாகனங்களில் ஏற்றப்பட்
டு காவல்நிலையம் கொண்டு செல்
லப்பட்டனர்.பெயர்,முகவரிகளை மட்
டும் அங்கு குறிக்கத்தவறவில்லை.
பின் கலைவாணர் நகர் சிறைக்கு
சகலரும் எடுத்துச்செல்லப்பட்டனர்.
அங்கு பலரும் தம்மை அறிமுகம்
செய்து கருத்துக்களை பரிமாறினர்.
அனைவரும் தம்கட்சி,தம்அமைப்பு
அல்லது தமது புகழ் பாடியது அவனு
க்கு எரிச்சலை உண்டாக்கியது.
"நம்மவர் சுயநலப்புலிகளாக இருக்கி
றார்களே!"என மனம் வெதும்பியது.
நிதியும் சேகரித்தார்கள். மாலை
வெளியே விட்டனர்.வீடு திரும்ப பஸ்
ஸில் ஏறினான்.ஓட்டுனர் அருகே
ஒரு அறிந்தபெண் (கழுத்தில் தாலி)
கொஞ்சிக்கொஞ்சிப்பேசிக்கொண்
டே வந்தாள்."ஏ!மாமா,வண்டி ஓட்ட
கத்துக்குடு மாமா!!" பாட்டு ஒலிக்க
சிரிப்பும் சிணுங்கலும் கூடியது.
அறிவழகனுக்கு தலைசுற்றியது.
அது அந்தப் பெண்ணடிமைப்
போராட்டவீரரின் மனைவியல்லவா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்